Germany: 1DM, Switzerland: 1SFr, France: 5Frs, U.K: 50P, Canada: $ 1, Denmark: 5Kr

வருடம் - 03 திருவள்ளுவர் ஆண்டு - 2027 இதழ் -27

Largest Circulation in Europe

# இளைஞன்

ஆவணி - 1996 மாத இதழ் - ஜெர்மனி

Tel: 069/ 704439 - ELAIGNAN TAMIL MONTHLY - Fax: 069/ 775669

ஆதவா ஆசியா சென்ரர்

தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப் பொருட்கள், ஓடியோ வீடியோ, சிடி, வார மாத பத்திரிகைகள், மரக் கறி, கடலுணவு வகைகள், அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள-

ADAVAA ASIYA CENTAR

Taunus Str- 15, 60329 Frankfurt/M, Germany
Tel: 069/ 25 03 61-2, Fax: 069/ 23 40 45

# புலிகள் பலம்: முன்னாள் பிரதமர் ஒப்புதல்!

(கொழும்பு)
இலங்கை பாராளுமன்றத்தில், முல்லைதீவு ராணுவ முகாமை புலிகள் கைப்பற்றியது பற்றிய விவாதம் நடந்தது. முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சி தலைவருமான விக்ரம் சிங்கே பேசியபோது "விடுதலைப்புலிகள் நமது ராணுவத்தை தோற்கடிக்கும் அளவிற்கு பலம்மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து விட்டனர். இன்னும் காட்டுப்பகுதியில் 5000 சதுர கிலோமீட்டர் பரப்பளவு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்களை எதிர்த்து போராடுவது கடினம். இப்போது அவர்கள் தீவிரவாதிகள் என்பதைவிட ராணுவத்தை தோற்கடிக்கும் சக்தியாகி விட்டனர்" என்றார்.

## கந்தப்புவும், சோமண்ணையும்

கந்தப்பு: ஆசியன் கடைகளில இப்ப நூலநிலையமும் நடத்துறாங்களோ...
சோமண்ணை: உமெக்கென்ன தட்டிப் போட்டுதோ? ஓசியில வாசிக்கிறதுகள் வந்து நிண்டு வாசிக்குதுகள், கடைக்காரரும் முகத்த முறிக்கேலாம விட்டுட்டு இருக்கினம்.
கந்தப்பு: ???!!!...

-கற்கி, பிராங்பேர்ட்-



## புலிகளின் கண்ணிவெடி!




யாழ்ப்பாணத்தில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி, தினமும் பல சிங்கள இராணுவத்தினர் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள்! படத்தில் இராணுவத்தினர் கண்ணிவெடிகளை மிக அவதானமாக அகற்றும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.



'டெஸ்ட் ரியூப்' கொரில்லா

நாமும் மனிதர்களுக்கு சளைத்தவர்களில்லை என்று கூறவருகின்றன இந்த கொரில்லாக்கள்!
டெஸ்ட் ரியூப் குழந்தைகள், மனிதர்களின் உயிரணுக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது உங்களுக்குப்புதிய செய்தியல்ல. கலவியல் என்பது இல்லாமலே ஒரு "குவா குவா" வைப் பெற்றெடுக்க வழிசெய்து தந்த விஞ்ஞானம், இன்னும் ஒருபடி

தொடர்ச்சி 23ம் பக்கம்...



பிராங்பேர்ட் நகரில் மக்கள் மனங்கவர்ந்த ஸ்தாபனம்! ஒருமுறை விஜயம் செய்யுங்கள் உண்மையை உணர்வீர்!

அம்பாள் ஆசியன் சொப்

சாறி வகைகள், அனைத்துரக ஜவுளிகள், எவர்சில்வர் பொருட்கள், மற்றும் கடலுணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள், அலங்காரப்பொருட்கள் தங்க நகைகள், மங்கள வைபவங்களுக்கான அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்

AMPAL ASIAN SHOP - Mainzerland str 111, 60329 Frankfurt/M, Tel & Fax: 069/231277

உலகுவாழ் இளைஞருக்கான இளைஞரின் இனிய பிரசவம்!

FREE E - BOOKS (TAMIL) - 1081/09
பொள்ளாச்சி நசன்

வருடம் - 03 இதழ் - 27 ஆவணி - 1996

# இளைஞன் பார்வையில்!

## கதிர்காமரின் டெல்லித்தூதும் சந்திரிகாவின் சதியும்

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் மீண்டும் 20. 06. 96 அன்று இந்தியாவிற்கு சென்றுள்ளார். இவரின் டெல்லி விஜயம் மீண்டும் சந்திரிகா அம்மையாரின் ஒரு கபட நாடகமே!

இந்தியாவில் தி. மு. க பங்கு கொண்டுள்ள ஐக்கிய முன்னணியின் புதிய மத்திய அரசை இலங்கை இனப்பிரச்சனையில் தமக்கு ஆதரவாகத் திருப்பும் நோக்கத்துடனேயே கதிர்காமரை சந்திரிகா தூதனுப்பினார் என்பது பகிரங்க இரகசியம்.

பெயரளவில் ஒரு தமிழர் என்கிற முறையில் இலங்கைத்தமிழர் பிரச்சனையில் கதிர்காமர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நடவடிக்கைகள் சாதகமாக பயனுள்ளவையாக இரக்கும் என்றும் தமிழன் ஒருவன் தனது இனத்திற்கு பாதகமாக செயல்ப்பட மாட்டான் என்ற தோற்றத்தைக்காட்டவும் கதிர்காமர் அனுப்பப்பட்டார். ஆனால், இவருக்கோ இலங்கையின் வட கிழக்கு -தமிழர் தாயகத்தைப்பற்றி எவ்வித அக்கறையும் கிடையாது. மூன்று நான்கு தலைமுறைக்கு மேலாக கொழும்பே தாயகமாக தஞ்சம் புகுந்து வாழும் பரம்பரையில் உள்ளவர். தமிழில் இரண்டொரு வார்த்தைகளைக் கூட சரியாக உச்சரிக்கவோ, பேசவோ தெரியாதவர்.

இதற்கு முன்பு தமிழர்களின் அரசியல் இனப்பிரச்சனை பற்றி பேசியவரும் அல்ல. அதுபற்றிய வரலாறுகளை அறிந்தவரும் அல்ல. வலிகாமம் என்றால் என்ன, தென்மராட்சி எங்கே என அறியாதவர் பாவம்.

சந்திரிகா தலைமையிலான அரசின் வெளியுறவு அமைச்சராக இருப்பதால் மட்டுமே இவரது இந்திய விஜயம் சரியாக இரக்கலாம். ஆனால், சென்ற இரண்டாண்டுகளாக இலங்கைத்தமிழர் நலன் பற்றியோ, இந்தியாவின் நல்லுறவு பற்றியோ சந்திரிகா அம்மையார் ஏதாவது சாதகமான நிலைப்பாட்டை மேற்கொண்டாரா என்பதை இந்த அமைச்சர் ஐயாவிடமே கேட்கின்றோம்.

தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை இராணுவ பலத்தால் நசுக்கியும், தான் தலைமைக்கு வர உதவிய நாடாளுமன்ற மற்றும் குடியரசுத் தேர்தல்களின்போது தமிழர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காற்றோடு பறக்கவிட்டும், பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்களின் வேண்டுகோளை உதாசீனம் செய்தும், இணைந்த தமிழ் மாகாண திட்டத்தையே திணறடிக்கவும் செயல்பட்டு வரும் ஒரு சிங்களத் தலைவருக்காகவா "எல்லாம்" அறிந்த இந்த கதிர்காமுத்தமிழர் தான் அறியாதவர் போல் வழி பார்க்க இந்தியாவிற்கு சென்றார்? இல்லை, கொழும்பை ஒட்டியே இருந்த பாதகத்தால் போலும் ஆகவே;

"அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவு
அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு"

என்ற ஔவைக்கிழவியின் வாக்கை நினைவு படுத்தி மேலும் பல ஒட்டுக்களையும், உறவுகளையும் எதிர்பார்த்து உதவி செய்யும் இந்த கதிர்காமருக்கு இவர் எச்சமயத்தைச் சார்ந்தவரானாலும் தென் இலங்கையிலுள்ள கதிர்காமத்தான் (முருகன்) இவருக்கு நல்ல புத்தியை அருள் பாலிப்பானாகுக.

## என்ஜினீயரிங் கல்லூரி- பாலிடெக்னிக்; ஈழஅகதிகள் மனு!

தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் தங்களுக்கு சில இடங்களை ஒதுக்குமாறு அரசிடம் ஈழ அகதிகள் மறுவாழ்வு சங்க தலைவர் அரசிசடம் கோரிக்கை விடுத்து இருந்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

**40 இடங்கள்-**

இதை தமிழக அரசு கவனமாக பரிசீலித்து பாலிடெக்னிக் மற்றும் என்ஜினீயரிங் கல்லூரிகளில் இலங்கை தமிழர்கள் மற்றும் இலங்கை அகதிகளுக்கு இடம் ஒதுக்க முடிவு செய்தது.

**நிபந்தனைகள்-**

இந்த இடஒதுக்கீடு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

1) அகதிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் 6. 4. 88 ல் பிறப்பித்த உத்தரவு பின்பற்றப்படும்.

2) தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் அட்மிஷன் சமயத்தில் அகதிக்கான சான்றிதழ் பாஸ்போர்ட் விசா ஆகியவற்றை தாக்கல் செய்ய வேண்டும்.

3) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்வி தகுதி பெற்று இருக்க வேண்டும்.

4) 1995 - 96 இல் அல்லது அதற்கு முன்பு தமிழ்நாட்டில் படித்த தகுதி வாய்ந்த மாணவர்கள்.

5) ஒதுக்கீடு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதிகமானோர் விண்ணப்பித்தால் தேவையான மாணவர்கள் தகுதி அடிப்படையில் தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் (திறமை) தேர்வு செய்யப்படுவர்.

"இளைஞனால் உலகில் ஒன்றிணைவோம்!"

ELAIGNAN TAMIL MONTHLY

Largest Circulation in Europe

இளைஞன்

முகவரி:-
ELAIGNAN
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel: 069/ 70 44 39
Fax: 069/ 77 56 69

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: ARTIST SEGAR

ஆசிரியர்: ஓவியர் சேகர்

இணை ஆசிரியர்:
ஏ. ஜே. ஞானேந்திரன்

துணை ஆசிரியர்:
ரவிசெல்லத்துரை

நமது நிருபர்கள்:
கொழும்பு: R. பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
12 மாதம்: 30 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" உலக பிரதிநிதிகள்

சுவிற்சலாந்து
P. சந்திரன்
Haupt str. 54
4127 Birsfelden
Basel (CH)

பரீஸ்
ரமணன் வீடியோ பலஸ்
7, Rue Perdonnet
75010 Paris

டென்மார்க்
S. செல்வன்
Nr. Sundbyvej - 28 st.
8900 Randers


லண்டன்
சிவம் - பரமலிங்கம்
15 Farn House
HA0 4Uy Wembly - UK

ஜேர்மனி
T. ஜோதி
Lange str. 243
59067 Hamm

இவ் இதழில் வரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கதாரர்களே பொறுப்புடையவர்கள்.
ஆக்கங்களின் கருத்து மாறுபடாது அதனைச் சுருக்கவோ, திருத்தவோ ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.
"இளைஞன்" இதழிலிருந்து எந்த வொரு ஆக்கமும் மறுபதிப்புச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

## ஓ... இளைஞனே...!

குடும்பத்திற்கு - நீ
இமையாக இருக்க
வேண்டுமே தவிர
சுமையாக அல்ல!



# இவனும் ஓர் ஈழத்தமிழன் தான்...

-ரமேஷ் வவுனியன்-

பிறந்த மண்ணின்
துயரத்தை தூக்கியெறிந்து
சுறுசுறுப்புக்கும் பரபரப்புக்கும்
வித்தியாசம் தெரியாத
"ஐரோப்பிய அவசரமாய்"...
யார் இவன்?

ஈழத்தில்
எம்மவர் உடல் கருக - இங்கு
இதயத்தை கருக்கிவிட்டு
இன்பத்தை தேடியலையும்
காமுகனாய்...
யார் இவன்?

நொங்கு வண்டில் சூழ்ந்து வர
குரும்பெட்டித் தேரிழுத்த
சுந்தர பூமியில்
"மனித
ரத்தமும், சதையும்
சிதறிக்கிடந்தால் தான் - எனக்கு
இங்கு
அகதி அந்தஸ்து தொடரும்"
என்கிறானே...!
யார் இவன்?

சோகங்களையே சுவாசங்களாக்கி -எமை
சுமந்த மண்ணில்
சமாதானக் காற்றன் சாயல் தெரிய
முகம் கறுத்து, விறுவிறுத்து
சமாதானம் கர்ப்பத்திலேயே கரைய
கடவுளை வேண்டுகிறானே...!
யார் இவன்?

அம்மாவும், அப்பாவும் -கூடவே
அக்காவும்
கொடுங்கோல் ஆட்சியில்
குடும்பத்தோடு முடமாக - இங்கு
குளுகுளுப்பான "குட்டி" தேடி
நாயாய் அலைகிறானே...!
யார் இவன்?

உணவின்றி, உயிரிழைத்து
மார்பு வற்றிய அக்கா - குழந்தை
அழுதாலும் சட்டை திறப்பதில்லையாம் - காரணம்
முலையில் பாலுமில்லை
அடிக்கடி திறந்து சட்டை கிழிந்தால்
மாற்ற வழியுமில்லை - ஆனால்
அவள் தம்பி - இங்கு
இந்திய நடிகை வந்ததும்
தடவித் தடவி
தங்கக் கொலுசு கட்டி விடுகிறானே...!
யார் இவன்?

இவனும் ஓர் ஈழத் தமிழன்தான்.






## லக்சுமி ஆசியன் மாளிகை

உங்களுக்குத்தேவையான இலங்கை, இந்திய உணவுவகைகள், மரக்கறிகள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள், குழந்தைகள், பெரியவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள், 22 கரட் தங்க நகைகள் நீங்கள் விரும்பிய வண்ணத்தில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் புதிய, பழைய திரைப்படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் உண்டு. தரமான ஓடியோ, சீடிக்கு எம்மை நாடுங்கள். காஸ் அடுப்புகளும், சமையல் பாத்திரங்களும் வாடகைக்கு தரப்படும்.

-Huetten Platz 20 - 22, 35683 Dillenburg, Tel: 02771/6585 & 02778/2148, Fax: 02771/6508-

# இளைஞனின் டயறிக் குறிப்புகள்

## தொகுத்துத் தருபவர்: நாடோடி

23. 06. 96 - மாஜி கிரேக்க பிரதமர் Andreas Papandreou தனது 77 வயதில் மாரடைப்பால் மரணமாகிறார். இரண்டு தசாப்த காலம் கிரேக்க நாட்டை ஆண்டு சாதனை படைத்த முதற் சோஸலிச பிரதமர் இவர்.

வடபகுதியைத் திருத்திய மைக்க 270 மில்லியன் டாலர்கள் வரையில் தேவைப்படுவதாகவும் இதற்கான நிதி உதவியைத் தரும் படி வெளிநாடுகளைக் கோருகிறார் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா.



24. 06. 96 - மூன்று கட்டிட நிர்மானத் தொழிலாளர்கள், காலிலும் தலையிலும் சுடப்பட்டு இத்தாலி நகரமான CASABONA இல் கொல்லப் படுகிறார்கள். மாபியாக் கோஷ்டியினரின் வேலையாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

25. 06. 96 -மாஜி ருஷ்ய பாதுகாப்பு மந்திரிக்கு மிக நெருக்கமாக இருந்த 7 இராணுவ ஜெனரல்கள் ருஷ்ய ஜனாதிபதியினால் வெளியேற்றப்படுகிறார்கள்.

26. 06. 96 - WEST BANK - இல் மூன்று இஸ்ரவேல் இராணுவ வீரர்கள் கடமையில் நின்றபோது பலஸ்தீனிய தீவிரவாதிகளால் கொல்லப்படுகிறார்கள்.

27. 06. 96 - 71 வயது மூதாட்டி ஒருவரை சூனியக் காரி என்று காரணம் காட்டி உயிரோடு எரித்தமைக்காக தெ. ஆபிரிக்காவில் எட்டு பேருக்கு, ஆளுக்கு 10 வருட ஜெயில்வாசம் கிடைக்கிறது.

28. 06. 96 -துருக்கியில் மாஜி பிரதமர் Tansu Ciller இன் கட்சியுடன் Islamist Welfare Party ஒரு கூட்டு அரசு அமைக்க இணக்கம் கண்டிருப்பதாகக் கூறுகின்றது.

29. 06. 96 - ஈராக் தனது ஆயுதங்களைத் தொடர்ந்தும் மறைத்து வைத்திருக்கின்றது என்று ஐ. நா. வில் பிரதம ஆயிதப் பரிசோதகர் Rolf Ekeus கூறுகின்றார்.

30. 06. 96 - பாரெய்னில் (வளைகுடா நாடு) 7 பங்களாதேஷ் பிரஜைகளைக் கொன்ற குற்றத்திற்காக மூவர் மரணதண்டனை விதிக்கப்படுகின்றார்கள்.

1. 7. 96 - பாக்தாத்தில் (ஈராக்) 6 தொடக்கம் 16 வரையிலான நீண்டதூரத் தாக்குதலுக்கான ஏவுகணைகள் ஒளித்து வைக்கப் பட்டிருக்கலாமென ஐ. நா. ஆயுதப் பரிசோதகர்கள் தமது அறிக்கையில் கூறுகின்றார்கள்.

2. 7. 96 - ருஷ்சியாவின் இரண்டாவது சுற்றுத்தேர்தல் நாளான இன்று 93, 000 வாக்குச் சாவடிகளில் 100 மில்லியனுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க இருக்கிறார்கள்.

3. 7. 96 -அமெரிக்காவின் மேற்கு கரையோரப் பகுதியில் பிரமாண்டமான அளவில் மின்சாரத்தடை ஏற்படுவதால், ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கின்றன.

4. 7. 96 - யெல்ற்சின் 53, 5 வாக்குகளும், கம்யூனிச வேட்பாளர் 40. 5 வாக்குகளுமாக ருஷ்யாவின் இரண்டாவது சுற்று தேர்தல் முடிவுகள் வெளியாகின்றன. ஐரோப்பிய நாடுகள் யெல்ற்சினை வாழ்த்திச் செய்தி அனுப்புகிறார்கள்.

5. 7. 96 - ஒரு தற்கொலைப் படையினரால் யாழ்ப்பாணத்தில் குண்டுவெடிக்க வைக்கப்பட்டு 17 பேர் வரையில் கொல்லப்படுவதோடு, அமைச்சர் ஒருவரும் சிறு காயங்களோடு தப்பிக்கின்றார். ஒரு இராணுவ பிரிகேடியர் கொல்லப்படுகின்றார்.

6. 7. 96 -தன்னுடைய ஆட்சிக்கால முடிவில் (1999) தான் ஆட்சி பீடத்தில் இருந்து இறங்கப்போவதை தெ. ஆபிரிக்க பிரதமர் நெல்சன் மண்டேலா உறுதிப்படுத்துகிறார்.

7. 7. 96 - ஒவ்வொரு 5 நிமிடமும் ஒரு நோயாளியை உருவாக்கும் எயிட்ஸ் சம்பந்தமாக இதுவரையில் நடந்திராத மிகப்பெரிய அளவிலான மாநாடு கனடாவில் VANCOUVER நகரில் 13, 000 விஞ்ஞானிகள் பங்களிப்புடன் ஆரம்பமாகிறது.

8. 7. 96 - ஜம்மு காஷ்மீரில் பிடிக்கப்பட்ட 19 பத்திரிகையாளர்கள் முஸ்லீம் தீவிரவாதிகளால் விடுவிக்கப்படுகிறார்கள்.

9. 7. 96 - முதற்தடவையாக வெள்ளைமாளிகைக்கு விஜயம் செய்யும் இஷ்ரவேலின் புதிய ஜனாதிபதி தனது உரையில், தான் சமாதானத்திற்கு தொடர்ந்து உழைப்பேன் என்று உறுதிமொழி அளிக்கின்றார்.





ஜெர்மனியில் மலிவு கடை என்று மக்களால் அழைக்கப்படுவது..

ஆச்சி துணை

ஐயர், மணவறை, சோடனை, திருமண அழைப்பிதழ்கள், கமெரா போன்ற உங்கள் வைபவங்களுக்கான தேவைகளுக்கு நீங்கள் ஓடி, ஓடி அலையாமல் ஓரே இடத்தில் ஆலோசனையை மாத்திரமன்றி அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

AACHCHITHUNAI, Salinen str 1/1, 74177 Bad Friedrichshall, Germany, Tel & Fax: 07136/ 3921

# 'கோவிலை இடித்தேன். கோவில் என்பதற்காக அல்ல, கோவில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது! என்பதற்காக' -கலைஞர். மு. கருணாநிதி-

"அர்த்தமற்ற இந்துமதம்" கட்டுரையை தொடர்ந்து படித்து வருகிறேன். கட்டுரையாளரின் தர்க்கம் இந்து மதத்தின் கால் வேர்ஊன்றி இருக்கும் அதிமூட நம்பிக்கைகளையும் அதனால் சமுதாயத்தில் நடைபெறுகின்ற அனத்தங்களையும் அகற்ற வேண்டி தற்கிக்கப்படுகிறது!

இற்றைக்கு ஏறக்குறைய முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன் பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களால் தொடக்கப்பட்ட அறிவொளி யுத்தம் இந்து மதத்தின் பெயரால் தமிழக மக்கள் "முகமிழந்து" போவதை தடுக்க தொடக்கப்பட்ட பகுத்தறிவு பிரச்சாரம் மதத்தின் பெயரால் நடைபெறுகின்ற அழுக்காறுகளை மக்களுக்கு இனங்காட்டியது. இதனால் வட இந்தியர்களது ஆரியமாயை தணிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி மற்றும் பல தொண்டர்கள் தொடர்ந்த பகுத்தறிவு யுத்தம் பிராமண "பேய்க்காட்டல்"களை ஆட்டங் காணச்செய்தது மட்டுமன்றி பெருந்தொகையான மக்களை மூடநம்பிக்கை என்ற படுகுழியில் இருந்து மீட்டது.

இந்த பகுத்தறிவு வாதத்தை தனக்கெட்டிய அறிவுக்கு ஐரோப்பாவிலும் பரப்பிவரும் இரா. மோகனராஜாவின் துணிசெயல் பாராட்டுக்குரியது.

"கோவிலை இடித்தேன், கோவில் என்பதற்காகவல்ல, கோவில் கொடியவர்களின் கூடாரமாக இருக்க கூடாது என்பதற்காக" என்று வசனம் தந்தார் அன்று இன்றைய தமிழக முதல்வர்.

அர்த்தமற்ற இந்துமதம் என்று எழுதினேன் "மதம் அர்த்தம் இல்லை என்பதற்காகவல்ல, அது அர்த்தம் இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காக". அவரின் கட்டுரைக்கு இந்த வசனம் பொருந்துமென்று நினைக்கிறேன்.

மதத்தின் பெயரால் சாதி வகுத்து இந்துமதத்தை இழிவு படுத்தியவர்கள், மதத்தின் பெயரால் பெண் அடக்குமுறைக்கு வித்திட்டு உடன் கட்டை ஏறுதல் என்ற சடங்கில், விதவை பெண்களை உயிரோடு எரித்து காட்டுமிராண்டித்தனம் புரிந்து இந்துமதத்தை இழிவு படுத்தியவர்கள், ஏழைக்குழந்தைகள் பாலுக்கு அழுதிட தெய்வச்சிலைகளுக்கு குடங்குடமாய் பால் அபிஷேகள் செய்தும், ஏன் இன்றைய நவீன விஞ்ஞான உலகில் கணபதியன் கற்சிலைக்கு பால் கொடுத்து இந்துமதத்தின் தத்துவத்தையே கேலிக்கூத்தாக்கிக் கொண்டிருக்கும் பக்திப் பழங்கள் என்றுதான் உணர்வார்களோ "இந்து தத்துவத்தை"


-காசினி, ஜேர்மனி-

## ஆ +லயம்-ஆலயம்!

*"அர்த்தமற்ற இந்துமதம்" என்ற கட்டுரை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கட்டுரையாளர் தனது உண்மையான கருத்துக்களையே கட்டுரையில் குறிப்பிடுகிறார். அர்த்தமுள்ள இந்துமதத்தை அர்த்தமற்றதாக்கும் இந்துக்களைப் பற்றி உண்மையான, சிந்திக்கக்கூடிய, திருத்திக் கொள்ளக்கூடிய விடயங்களைத்தான் குறிப்பிடுகிறார். அவரின் முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள். "காயமே கோயிலாக" என்று தேவாரத் திருமுறையில் குறிப்பிடப்படுகிறது. மனச்சுத்தியோடும், மனச்சாட்சியோடும் வாழ்கிறவர்கள் கடவுளைத்தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை. இன்னொன்று ஆ+லயம் -ஆலயம். ஆன்மா ஒடுங்குகின்ற இடம் என்று பொருள் நண்பர் குறிப்பிட்டதுபோல இங்கு ஆலயத்திற்குப்போனால், ஆன்மா ஒடுங்குவதற்கு முடியாது. கடவுள் சந்நிதானமே வேடிக்கையிடமாகிறது; சந்திப்பிடமாகிறது. என்று திருந்துவார்கள் இவர்கள். காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.*

-ஜெயாசதீஸ், டியூரன்-


கடுகு முதல் தங்கம் வரை கொள்வனவு செய்ய நாடுங்கள்..



தும்பிக்கை அது நம்பிக்கை!

பிள்ளையார் ரேடேர்ஸ்

எம்மிடம் சகல விதமான ஆசிய நாட்டு உணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள், எவர்சில்வர் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர்களுக்கு ஏற்ற ரெடிமேட் ஆடைகள், சாறி வகைகள், அசல் 22 கரட் தங்க நகைகள் போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில் மனநிறைவுடன் - மலிவு விலையில் கொள்வனவு செய்ய நாடுங்கள்..

PILLIYAR TRADERS

Mainzer landstr - 91, 60329 Frankfurt/M, Germany, Tel & Fax: 069/ 23 02 68

Geschaeftsfuehrer - N. Mohanaraj - Car Tel: 0172/ 6713582

# ஐடியா ஐயாசாமி



ரவிசெல்லத்துரை எழுதும் நகைச்சுவைத் தொடர்...

## "கை ரெலிபோன்" கந்தவனம்

வணக்கம் தமிழ் மக்களே! உங்களை போனமாசம் காணமுடியவில்லை என்று கவலை. அது இந்தமாதம் உங்களை கண்டவுடனே பறந்திட்டுது கண்டியலே. நான் இருந்தாப்போல இலண்டனுக்கு போகவேண்டி வந்திட்டுது பாருங்கோ. இலண்டனில் போய் இறங்கினால், கொழும்பிலை கொட்டாஞ்சேனையில் நிண்ட மாதிரி கிடக்குது பாருங்கோ. ஒரே தமிழ்ச்சனம் தான். ஆனால், கொழும்புக்கும் இங்க உள்ள சனத்திற்கும் கொஞ்ச வித்தியாசம் என்னண்டா எல்லோரும் அது தான், எங்கட சனம் எல்லாம் கையிலை ஒரு கைரெலிபோன் வைச்சபடி திரியினம் கண்டியலே. ஒரு இடத்திலை கும்பலா ஒரு தமிழ்ப் பெடியல் கூட்டம் போச்சினம். எல்லாற்றை கையிலும் கைக்கடக்கமான கை ரெலிபோன் இருந்தது பாருங்கோ. முன்னுக்கு ரெலிபோனிலை சிரிச்சு சிரிச்சு கதைச்சுக்கொண்டு போனார். அதேபோல கடைசியாய் போறவரும் கை ரெலிபோனிலை கதைச்சுக் கொண்டு போனார். என்னடப்பா எங்கட பெடியளுக்கும் இப்ப நேரம் இல்லாத உழைப்பு அதனாலே யாரோடையோ ஏதோ கதைச்சபடி வேலைக்கு போறாங்களாக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு, பக்கத்திலை இருந்த என்ர சிநேகிதனிட்ட கேட்டன் பாருங்கோ. எங்கட பெடியளின்ர கஷ்டத்தை வேலைக்கு போய் வரும் போதே ரெலிபோனிலை தங்கட அலுவலை பார்க்கிறாங்கள் எண்டு... அதுக்கு என்ர சிநேகிதன் சொன்னான். அவங்கள் ஒண்டும் அலுவல் பார்க்க கதைக்கேல்ல, முன்னுக்கு போறவன் பின்னுக்கு வாறவனோடதான் ரெலிபோனிலை கதைக்கிறான் எண்டு.

இதை கேட்ட உடனே எனக்கு தூக்கிவாரிப்போட்ட மாதிரி இருந்தது கண்டியலே. பத்தடி வித்தியாசத்திலை போறவங்கள் ரெலிபோனிலையே கதைக்க வேணும்? எல்லாம் காசு செய்யிற வேலைதானே எண்டன்.

காசு செய்யிற வேலையில்லை அண்ணே, இங்க இரவிலை உந்த ரெலிபோனிலை கதைச்சால் காசில்லையாம். எல்லாம் இரவில பிரியா கதைக்கலாம் எண்டு சொன்னார்.

அதோட இன்னொரு விஷயமும் சொன்னார். இரவிலை ஆக்களை நித்திரையால எழுப்புறது, யாரும் தமிழ்க் குமர்ப்பிள்ளைகள் உள்ள வீட்டை சாமத்திலை எடுத்து நல்ல சுத்த தமிழ் கதைக்கவும் உந்த கை ரெலிபோன் உதவுதாம்.

வெள்ளையன் கண்டு பிடிச்ச ரெலிபோன் என்னமாதிரி வளர்ச்சி அடைஞ்சு கை ரெலிபோனா வெளிவர, அது எங்கட சனத்துக்கு என்னென்ன அவரசத்திற்கு எல்லாம் உதவுது பாருங்கோ.

அதுதான் உங்களுக்கு ஒரு ஐடியா தாறன். உப்பிடி ஆரும் கை ரெலிபோனோட எங்கட தமிழ்ச்சனத்தை கண்டால் கொஞ்சம் மரியாதையா கதையுங்கோ. இல்லாட்டி இலண்டனுக்கு போனா இரவில தூங்க மாட்டியல்.

இலண்டனால இண்டைக்குத் தான் வந்தனான். நல்லா தூங்க வேணும், வாறன் பிள்ளையள். எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்.

**இரவிலை ஆக்களை நித்திரையால எழுப்புறது, யாரும் தமிழ்க் குமர்ப்பிள்ளைகள் உள்ள வீட்டை சாமத்திலை எடுத்து நல்ல சுத்த தமிழ் கதைக்கவும் உந்த கை ரெலிபோன் உதவுதாம்!**

## தளிர்ப்பு



இலையுதிர் காலம்.

மரம் மொட்டையாக நின்றது.

புல்மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின.

'உன் இலைகள் விழுந்துகொண்டிருக்கின்றன. உன்னைப் பார்த்தால் அழவேண்டும்போல் இருக்கிறது...' என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது.

மரம் சொன்னது:-

'நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும்'

நிமிர்ந்தே நின்றது மரம்.

அது சொன்னது:-

'விழுவதற் கெல்லாம்
அழுவதற் கில்லை.'

காசி ஆனந்தன்.

## நக்கலும் நளினமும்



சி. சி: நக்கல் எண்டால் என்ன? நளினம் எண்டால் என்ன?

ஐ. ஐ: ஐரோப்பாவில் இருக்கிற எங்கட ஆட்களிட்ட எங்க வேலை எண்டு கேட்டால் நக்கல், என்ன வேலை எண்டு கேட்டால் நளினம். இதுக்குத்தான் சொல்லுறது நக்கல் இருந்தாலும், நளினம் இருக்கக்கூடாது எண்டு.


# தேன்கூடு

ஏ.ஜே. ஞானேந்திரன்

## Dr. No

சிலருக்கு வாழ்க்கையில் தாம் சந்திக்கும் ஏமாற்றங்களைச் சுலபமாகத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை.
நான் ஏன் எமாறவேண்டும், என்னை யாரும் ஏமாற்றவில்லை, நான் ஏமாறவும் இல்லை என்றொரு அசாத்தியத் துணிச்சலுடன் அசாதாரண செயல்களில் இறங்கி விடுகிறார்கள்.
இலங்கையின் தலைநகரில் நடந்த ஒரு அசாதாரண உண்மை நிகழ்ச்சியைப்பற்றியே இந்தத்தடவை நீங்கள் தேன்கூட்டில் வாசித்து அறியப்போகின்றீர்கள்.
இப்படி நடந்ததா என்று உங்களை வியப்புறும் வண்ணம் இந்தச்சம்பவம், கொழும்பில் அரங்கேறி இருக்கின்றது. இச்சம்பவம் ஒரு கதையல்ல. நிஜமான ஒன்றுதான்.
அண்மையில் ஒரு கைது நடந்திருக்றது. கைது செய்யப்பட்டவர் 32 வயது 'பெண் டாக்டர்' ஒருவர்! கொழும்பு ஜெனரல் வைத்திய சாலையில்தான் இவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.
ஒரு பெண் டாக்டரைக் கைது செய்யுமளவிற்கு அவர் அப்படி என்ன மோசமான காரியத்தில் இறங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?
கொலையா? கொள்ளையா?
அப்படி ஒன்றும் இல்லை.
அப்படியானால் என்னதான் குற்றம் செய்தார் டாக்டர்?
ஒரு டாக்டர் அல்லாதவர் டாக்டராக நோயாளிகளையும், ஜெனரல் வைத்தியசாலை ஊழியர்கள் எல்லோரையும் பல மாதங்கள் ஏமாற்றி வந்ததுதான் இவர் செய்த குற்றம்.
எப்படிச்சாத்தியப்படும் என்று கேட்கிறீர்களா?
இந்தப்போலி டாக்டருக்கு அழகான பெயர் ஒன்றைச் சூட்டியிருக்கிறார்கள்.
Dr. No! - ஜேம்ஸ் பாண்டின் திரைப்படப்பெயர் ஒன்று, இவருக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. பொருத்தமான பெயர்தான்!
அழகான பெண்ணான இந்தப் போலி டாக்டர் திஸ்ஸமஹாரஹம மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் பிறந்தவர்! அழகான பெண்மணி! பெயர் நிலுக்கா! பள்ளியில் படுசுட்டி! பரீட்சையில் நன்றாகவே புள்ளிகளும் சிறுவயதில் எடுத்திருக்கிறாள்! இவளுடைய வாழ்வின் ஒரேயொரு குறிக்கோள் (இதை வெறியென்றும் சொல்லலாம்) டாக்டராகி விடவேண்டும் என்பதகவே இருந்தது. சிறு பெண்ணாக இருக்கும் போது இவளுக்கு ஸ்டெதெஸ்கோப்பில் தீராத காதல்! எப்பொழுது தன் கழுத்தில் அது தவழும் என்று வண்ண வண்ணக்கனவுகளாகவே கண்டுகொண்டிருந்தாள்!
இவள் உயர் படிப்பை மேற்கொண்டிருந்தால் நிச்சயம் தன் கனவை நனவாக்கி இருப்பாள்! அனால், விதியின் விளையாட்டு எப்பொழுதும் விசித்திரமாக அமைந்து விடுவது அல்லவா?
இவளுடைய தந்தை, (இவள் சிறுவயதில்) இன்னொரு பெண்ணுடன் மோகம் கொண்டதில், குடும்பத்தையே கைவிட்டுவிட்டு ஆசைநாயகியுடன் போய்ச்சேர்ந்து கொண்டுவிட்டார்! ஒற்றையாக இருந்து கொண்டு, நிலுக்காவின் தாயினால் குடும்பச்சுமையைத் தாங்க முடியவில்லை.
இதன் விளைவு.....
நிலுக்கா என்ற விவேகமான சிறுமி 11 வயதில் பள்ளிப்படிப்பைக் கைவிடும்படி ஆயிற்று! தினசரி ஜீவனத்தை ஓட்ட முடியாமல் திணறிய தாய், நிலுக்காவை 13 வயதில், பக்கத்தில் உள்ள ஒரு போசனசாலை வேலைக்கு போய்வரும்படி நிர்ப்பந்திக்க வேண்டியதாயிற்று. ஒரு சிறுமியின் கனவும் சுக்கு நூறாக நொருங்கியது! ஹட்டலில் வேலை செய்யும்போது கூட, சிறுமி நிலுக்கா கனவு கண்டுகொண்டு தான் இருந்தாள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் படிப்பதை தன் பழக்கமாகக்கொண்டிருந்தாள்! இந்த ஹட்டலில் ஒருவருடம் வேலை செய்து முடிந்ததும், தன் வேலை ஸ்தலத்தை மாற்றும்படி கேட்டிருக்கிறாள் நிலுக்கா! தாயும் சம்மதித்து, மகளை ஒரு குடும்பத்தில் உதவி ஒத்தாசை செய்ய அனுப்பியிருக்கிறாள். வீட்டுக்காரர்களோ வயது போன தம்பதிகள். இவர்களுடைய மகளோ மருத்துவப்படிப்பின் இறுதிச்சோதனைக்கு தயாராகிக்கொண்டிருந்தாள். தேடி வந்த பூண்டு காலில் சிக்கியது போலாயிற்று நிலுக்காவிற்கு!
சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம், மருத்துவப் புத்தகங்களை படித்து தன் அறிவுப்பசிக்கு தீனி போட்டு வரலானாள் நிலுக்கா. 4 வருடம் இக்குடும்பத்தோடு தங்கியிருந்த நிலுக்காவிற்கு, நிறையப் படித்தறிய வாய்ப்பு உருவாயிற்று!
இதைத்தொடர்ந்து பொல்லனறுவ மாவட்டத்தில் பணிபுரிந்த ஒரு மருத்துவத் தாதியுடன் பணியாற்றும் வாய்ப்பு கிட்டிற்று. இத்தாதியின் கணவரோ தனிப்பட்ட விதமாகத் தொழிலாற்றும் ஒரு டாக்டர்!
விடுவாளா இச்சந்தர்ப்பத்தை நிலுக்கா? எப்படி ஊசி ஏற்றுவது- நோயாளிகளின் இரத்த அழுத்தப் பரிசோதனை செய்வது எப்படி? எப்படி நோயாளிகளுக்கு டாக்டர் மருந்து எழுதிக்கொடுக்கிறார்? எப்படிக் காயங்களுக்கு மருந்திடப்பட்டு பாண்டேஜ் கட்டப்படுகின்றது என்று எல்லாவற்றையுமே மிக உன்னிப்பாக கவனித்து மனதில் பதித்து வந்திருக்கிறாள் நிலுக்கா!
1982 இல் ஒரு உறவினரைச் சந்திக்க ரயில் பயணம் மேற்கொண்ட நிலுக்காவோடு விதி மீண்டும் விளையாடியது.
ஆனால், குருரமாக அல்ல!
அப்பொழுது அவளுக்கு 22 வயதாகி விட்டது. பருவம் பூத்துக் குலுங்கும் அழகி. கொழும்புக்குப் பயணமாகிக்கொண்டிருந்த அவள், இராணுவ சேவையில் இருந்த ஒரு இளைஞனை ரயிலில் சந்தித்திருக்கிறாள். கவரப்பட்டு இருக்கிறாள். தான் கல்லூரியில் மருத்துவப்படிப்பிற்காக இறுதி ஆண்டில் இருப்பதாகவும் ஒரு பொய் சொல்லி இருக்கிறாள். ஓடும் ரயிலில் துளிர்விட்ட காதல் முடிவில் தம்பதிகளாகி இருக்கின்றது. ஆயிரம் பொய்யைச்சொல்லி ஒரு கல்யாணத்தை முடிக்கிறார்கள். ஒரு பொய்யைச்சொல்லி ஒரு கல்யாணத்தை முடித்தால் என்னவாம் என்று நிலுக்கா நினைத்திருக்கலாம்!
இளம் தம்பதிகள், கடவத்த என்னும் இடத்தில் தமது புதுவாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறார்கள். தான் வகுப்புகளுக்குப் போவதாக வெளியில் போய்வருவதும், இரவில் மும்முரமாகப்படிப்பது போல, மருத்துவ நூல்களைப் புரட்டுவதுமாக நிலுக்கா தன் 'நாடக'த்தை நடாத்திக்கொண்டிருந்திருக்கிறாள்! பல மாதங்கள் கழித்து, நாடகத்தில் உச்சக்கட்டம் அரங்கேறியது.
கையில் நற்சாட்சிப்பத்திரம் சகிதமாக பட்டதாரியின் உடைகளுடன் ஒரு போட்டோ எடுத்துக்கொண்டு கணவனிடம் காட்டி, கணவனை பேரக்களிப்பில் மூழ்க வைத்திருக்கிறாள் கில்லாடி நிலுக்கா!
தான் டாக்டராகி விட்டாள் என்று நிலுக்கா கணவனை ஏமாற்றியதோடு நின்றுவிடாமல், ஊரையே ஏமாற்றும் வேலையில் இறங்கியிருக்கிறாள்.
ஒரு மருத்துவமனையைத் திறந்தோடு, 'குட்டி டாக்டரம்மாவாக' தொழிலைக் கணவனின் உதவியுடன் தொடங்கியிருக்கிறாள். காய்ச்சலில் பீடிக்கப்பட்டவர்கள், வேறும் சில்லறை வியாதிகளுடன் வருபவர்களுக்கும் மருத்துவம் பார்க்கப்பட்டு வந்தது.
இதற்கிடையில் 'டாக்டரம்மா' நிஜமாகவே வாழ்க்கையில் அம்மாவாக, வீட்டில் 'குவா, குவா' சப்தமும் கேட்கலாயிற்று. பிரிய மனமில்லாமல், கணவன் தூரவுள்ள இடத்திற்கு மாற்றலாகிப் போகவேண்டியும் நேரிட்டது. வேலையை ராஜினாமா செய்துவிட்டு, வீட்டில் பிள்ளையை பார்க்கும்படி கணவனிடம் சொல்லி, அவனைச் சம்மதிக்கவும் வைத்தாள் நிலுக்கா. மாதா மாதம் சராசரி 6000/-ருபா வரையில் கணவனின் கையிலும் கொடுத்து வந்திருக்கிறாள்.
இந்தக்கட்டத்தில் கொழும்பு பொது வைத்தியசாலையில் ஒரு புது பெண்டாக்டர் சேவைக்கு வரத்தொடங்கியிருக்கிறார். கார் நிறுத்தி வைக்கும் இடத்திலிருந்து தினமும் டாக்டர் கையில் ரோயோட்டா கார் சாவிக் கொத்தை சுழற்றியபடி வருவதைப் பலர் கண்டிருக்கிறார்கள். வைத்திசாலை ஊழியர்கள் டாக்டர், அவரது காரைத் தரிப்பிடத்தில் விட்டுவிட்டு வருவதாகவே நினைத்தார்கள்.
இந்தப்புதிய லேடி டாக்டர் வேறுயாருமில்லை. நமது நிலுக்காவே தான். தினமும் வந்து, OPD என்றழைக்கப்படும் வெளி நோயாளர் பிரிவில், ஏனைய டாக்டர்களுடன் கலந்து பணியாற்றிவிட்டு, வீடு திரும்புவதை வழக்கமாகிக் கொண்டிருந்தாள். எவ்வளவு துணிவு பார்த்தீர்களா?
சில சமயங்களில், கணவன் வெளியூரில் என்று சொல்லிக்கொ

தொடர்ச்சி 22ம் பக்கம்...


# லக்கி ஏசியா சொப்

22 கரட் தங்க நகைகள், சாறி வகைகள், ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கானரெடிமேட் ஆடைகள், இலங்கை, இந்திய பத்திரிகைகள், கடலுணவுப்பொருட்கள், போன்ற உங்கள் அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்!
உங்கள் திருமண வைபவங்களுக்கு தேவையான சமையல் பாத்திரங்கள், காஸ் அடுப்புகள், றைஸ் குக்கர்கள் மற்றும் நம் நாட்டு உணவு வகைகளையும் ஓடர் முறையில் செய்து வழங்குபவர்கள்.

Schul str.2, 52353 Dueren, Germany, Tel & Fax: 02421/ 45840, Private: 01717571490

# பச்சையான சங்கதிகளுக்கு சிவப்பு விளக்கு!

"பிக்கினி" உடையில் அசத்து கிறாரே? யார் இவர் என்று கேட்கிறீர்களா? மேற்கத்திய சினிமா உலகில் "SEX BOMB"



என்று வர்ணிக்கப்படும் BO DEREK என்பவர்தான் இவர்! இந்த ஹெலிவுட் நடிகைக்கு இன்று 39 வயதாகி விட்டாலும், கவர்ச்சித் தாரகையாகவே இன்றும் மின்னுகிறார்.


அண்மையில் ஒப்புக்கொண்ட ஒரு வீடியோ நிகழ்ச்சியில் தோன்றுவதை ரத்துச் செய்திருக்கிறார் இந்த நடிகை. 12 நிமிடங்கள் மாத்திரமே நீடிக்கும் இந்த வீடியோ நிகழ்ச்சியை படமெடுக்கத் தீர்மானித்து, அமெரிக்காவின் ஒரு பெரிய நிறுவனம் 250, 000 டாலர்கள் முற்பணம் கொடுத்து, இந்த நடிகையுடன் முன்பே ஒரு ஒப்பந்தம் செய்திருந்தது! இந்த விடியோப் படப்பிடிப்பில் கற்பழிப்பு நிகழ்ச்சிகள் உட்பட பல "பச்சை"யான சங்கதிகளுக்கு நடிகை சம்மதித்தாக வேண்டும் என்று நிறுவனம் நெருக்கியபோது, "என்னால் முடியாது" என்று மறுத்திருக்கிறார் இந்தக்கவர்ச்சிப் புயல்! நீர் வீழ்ச்சியின் அடியில் நனைவது, குதிரை ஓட்டுவது, கடற்கரையில் "SUN BATH" எடுப்பது போன்றவற்றிக்குத்தான் நான் சம்மதித்தேனே ஒழிய, இந்த நிறுவனம் கேட்கும் விதத்தில் நான் எதுவுமே ஒப்புக்கொள்ளவில்லை என்கிறார் நடிகை!

பெற்றுக்கொண்ட முற்பணத்தை திரும்பத்தரும்படியும், கையொப்பமிட்ட ஒப்பந்தத்தை மீறி நடந்து கொண்டதாகவும், இந்நிறுவனம் நடிகை மீது வழக்குத் தொடுத்தாலும், பிழையான முறையில் வழக்குத் தொடுத்ததாகக்கூறி, 24 மணி நேரத்தில் இதை வாபஸ் செய்திருக்கிறார்கள்.

காட்டிக் களைத்து விட்டாரோ இந்தக் கவர்ச்சித் தாரகை?

# போகிற போக்கில்..

ஏ. ஜே. ஜி



## டிக்! டிக்!! டிக்!!!

என்ன பாராதிராஜாவின் திரைப்படத்தைப் பற்றி எழுதவருகிறேன் என்று திகைக்கிறீர்களா? இது ஒரு புதினமான பெயர்தான் "டிக், டிக்" என்று பெயர் சொல்லி அழைக்கப்படுவது ஒரு இன மானைத்தான்! பெயரில் மட்டுமல்ல, இந்த மானின் வாழ்க்கை முறையுமே வினோதமானதும், மனிதர்கள் பின்பற்றக் கூடியதும்தான்!

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற விடயத்தில் இந்த மானினம் வெகு கண்டிப்பாக இருக்கின்றதாம். முலையூட்டிகளில் 5 வீதம் கூட இந்த மிருகங்களின் வாழ்க்கையை பின்பற்றுவதில்லை என்கிறார்கள் உயிரியலாளர்கள். கென்யா (ஆபிரிக்க) தேசிய பூங்காவில் ஆராய்ச்சியை மேற்கொண்டவர்கள், பல வியப்பூட்டும் தகவல்களைத் தந்திருக்கிறார்கள்.

தங்களுடைய பிராந்தியம் என்று நம்மவர்கள் வேலி அடைப்பதுண்டல்லவா?


இந்த இன மான்களோ ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சாணத்தைப்போட்டு, தமது ஜோடிகளை இதற்குள் பாதுகாத்து வைத்துக்கொள்கின்றன. பெண்களின் சாணத்திற்கு ஒரு தனிப்பட்ட வாசனை உண்டென்பதால், இவற்றை முகர்ந்து வேறு அந்நிய ஆண்மான்கள் தமது எல்லைக்குள் ஊடுருவி விடலாம் என்ற பயத்தால், பெண்மான்களின் சாணத்தின் மேல் தமது சாணத்தைப்போட்டு விடுகின்றன. இந்த "அதிரடி" நடவடிக்கைக்குப்பின்பு, தமது ஜோடிகளை அந்நியர்கள் கொண்டோடிக் கொண்டு போய்விடக்கூடாதே என்று விழிப்போடு, பெண்மான்களைப் காவல் செய்யத் தொடங்குகின்றன. இதையெல்லாம் மீறி பெண்மான் எல்லையை மீறி மேச்சலுக்குப்போனாலும், தம் கொம்புகளால் தம் ஜோடியைத் தள்ளி தம் பிராந்தியத்திற்குள் கொண்டு வந்து விடுகின்றனவாம்.



ஏகபத்தினி விரதம் என்ற பதம் இதனால்த்தான் வந்ததோ?

# அமிலமழை

அமெரிக்காவில் ஆண்டேரியோ அருகில் 80 கி.மீ. சுற்று வட்டாரத்தில் உள்ள 500 ஏரிகளில் அமிலமழை நீர் வந்து சேருவதால் அங்கு மீன்களையே காண முடிவதில்லை. வட அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான அழகிய ஏரிகள் நச்சு நீராக மாறி, அவற்றில் வாழும் மீன்கள் இறந்து போவதுடன், அப்பகுதியில் பறவைகள் கூட வாழ முடியாமலும், சிறு உயிரினங்கள் அழிந்து விடவும் மண் வளம் கெடவும், காடுகளும் செடி கொடிகளும் அழியவும் அமில மழைகாரணமாக உள்ளது.



மழை பொழியும்போது காற்று மண்டலத்திலுள்ள அமிலங்கள் மற்றும் சுற்றுப்புறத்திற்கு தீங்கு விளைவிக்கும் வாயுக்களால் மழையின் அமிலத் தன்மை அதிகமாகி மழை நீர் பொரியும். இதைத்தான் அமில மழை என்கிறோம்.

ரமேஷ் வவுனியன்
(குற்றவாளிக் கூண்டில் நானும் வண்ணை ஆனந்தனும்)

ஐயா!
சிறை மீண்ட செம்மலே!
வணக்கம்.
மகாகவி பாரதியை குற்றவாளிக்கூண்டிலா நிறுத்துகிறீர்கள்? வேண்டாம் ஐயா.

# தமிழ் மொழியகராதியை திருத்துங்கள்! அல்லது கொளுத்துங்கள்!!

அதை வெள்ளையனே செய்துவிட்டான்.
"சிங்களத்தீவினிற்கோர் பாலம் அமைப்போம்" என்று பாடிய பாரதியை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தும் நீங்கள் "தமிழ் மொழியகராதி" படித்தீர்களா? தமிழ் அகராதி படிக்காமலேயே பாரதியை குற்றவாளிக்கூண்டில் நிறுத்திய பெருமை உங்களையே சாரும்.
முதலில் தமிழ் மொழியகராதியில் "ஈழம்" எனும் சொல்லின் பொருளை மாற்ற முயற்சி செய்யுங்கள். அதன்பின் பாரதி, குப்புசாமி, முனியாண்டி எல்லோரையும் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுங்கள், இறக்குங்கள். 'முடிந்தால்' தலையையும் வெட்டுங்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை.

> முதலில் தமிழ் மொழியகராதியில் 'ஈழம்' எனும் சொல்லின் பொருளை மாற்ற முயற்சி செய்யுங்கள். அதன்பின் பாரதி, குப்புசாமி, முனியாண்டி எல்லோரையும் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுங்கள், இறக்குங்கள். 'முடிந்தால்' தலையையும் வெட்டுங்கள்!

தமிழ் மொழியகராதி
(நா. கதிரைவேற்பிள்ளை)
TAMIL MOLI AKARATHI
(N. KATHIRAIVERPILLI)
ஈழம்:- இலங்கை, சிங்கள தேசம், உலோகக்கட்டி, கள், கள்ளி, பொன்.

தமிழ்... தமிழ்... தமிழ்...
தமிழ் மொழிகராதியில் மாற்றத்தைக்கொண்டு வாருங்கள். அதன்பின் "சாவி", பூட்டு, சங்கிலி, சட்டம் எல்லாவற்றையும் பற்றி எழுதுங்கள்.
ஐயா!
சிறை மீண்ட செம்மலே!
நீங்கள் சிங்களச்சிறையை மட்டும்தான் பார்த்திருப்பீர்கள். ஆனால், இன்றைய இளைஞர்கள்,
இலங்கை இராணுவம் (SLA)
இந்திய இராணுவம் (IPKF)
தேசிய இராணுவம் (CVF)
(மற்றும் பல தமிழ்க்குழுக்கள்)
போன்றவற்றின் சித்திரவதைகளை அனுபவித்திருக்கிறார்கள், அனுபவித்தும் வருகிறார்கள்.
எனவே சிறை மீண்ட விடையத்தை இன்றுடன் குறைத்துக்கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் சித்திரவதைகளை அனுபவிக்கவில்லை என நான் சொல்லவில்லை.
வண்ணை ஆனந்தன் ஐயா!
இன்று தினற்தோறும் பிராங்பேர்ட் விமானநிலையத்தில் குறைந்தது ஐந்து இலங்கைத் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோருகிறார்கள். இப்படி ஜெர்மனியில் எத்தனை விமான நிலையங்கள் இருக்கின்றன? ஐரோப்பாவில்...? உலகில்...?
இப்படி தினந்தோறும் ஈழத்திலிருந்து தமிழர்கள் வெளியேறினால், இறுதியில் மிஞ்சுவது சிங்கள தேசம்தான்.
உங்களைப்போல் என்னைப் போல் (போலித்) தமிழர்கள் எல்லாம் வெளியேறினால் மீண்டும் "சிங்களத்தீவு" என்று (வாலி, வைரமுத்து, அப்துல் ரகுமான், ரத்தினம்) இன்றைய கவிஞர்களும் பாட வேண்டி வரும்! ●

## 'இளைஞன்' விவாத மேடை!

## குற்றவாளிக் கூண்டில் பாரதி!

> இன்று மேல் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களிடம் எங்கிருந்து வந்தீர்களென கேட்டால், ஸ்ரீலங்காவிலிருந்து என்று தானே கூறுகின்றோம். தமிழீழத்திலிருந்து என்று கூறுகின்றோமா?

* திரு. வண்ணை ஆனந்தன் அவர்களின் "குற்றவாளிக் கூண்டில் பாரதி" இது ஒரு சிரமமான சிந்தனைக்கிடம் கொடுத்துள்ளது. பிறவிக்கவிஞரான பாரதி, மனம் அறிந்தோ அல்லது அறியாமலோ தவறு விட்டிருப்பார் என நினைக்க முடியாது. அடக்கம், பண்பு, நல்லிதயம், எவரையும் சமமாக நினைக்கும் நோக்கம் இப்படியான குணங்கள் பெற்றவர்களே கவிஞராக சுடர் விட்டு பிரகாசிக்க முடியும். தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென அன்றே ஆசைப்பட்டவர் பாரதி. அப்படி இருக்க இலங்கையை விட்டுக்கொடுப்பாரா? அல்லது, மனிதர் யாரும் ஒரு நிகர் சமனாக வாழ்வோமே என்று பாடியவர், சிங்களவரும் மனிதர் என்ற நோக்கில் தமிழருக்கு உள்ளதுபோல்தான் அவர்களுக்கும் இப்புவியில் இடம் உண்டென்ற நோக்கில், சிங்களத்தீவினிற்கோர் பாலமைப்போம் என சம நோக்கில் அல்லது தான் எல்லோரையும் சம நோக்கில் பார்ப்பதை எடுத்துக்காட்ட பாடியிருக்கலாம்.

இன்று உலகெல்லாம் போற்றும் நம் திருக்கிகுறளை இந்தியாவில் ஒவ்வொரு மொழிக்காரரும் வெளியிடும் போது, திருக்குறள் நமதே என எழுதுகிறார்கள் என்று எப்போதோ வாசித்த ஞாபகம். அப்படி எழுதிவிட்டால் அது அவர்களுடையதாகி விடுமா? நாம் தமிழீழம் பெறலாமே தவிர இலங்கை முழுவதையும் பெற முடியாது. ஆகையால், சிங்களப் பகுதியை சிங்களம் என பாடியிருக்கலாம். எங்கு வாழ்ந்தாலும் தமிழினம் தமிழினம்தான். ஆகையால், தமிழர்களைப்பற்றி அவர் பாடியது தனிய தமிழ்நாட்டு தமிழரை அல்ல. தமிழ் நாட்டு தமிழ், இலங்கைத்தமிழ் என பிரிக்க நினைத்திருந்தால், தமிழ் தீவிற்கோர் பாலமமைப்போம் என பாடியிருப்பாரோ என்னவோ?

இன்று மேல் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களிடம் எங்கிருந்து வந்தீர்களெனக் கேட்டால், ஸ்ரீலங்காவிலிருந்து ன்றுதானே கூறுகின்றோம். தமிழீழத்திலிருந்து என கூறுகின்றோமா? ஸ்ரீலங்காவிலிருந்து என்று கூறினால் இலங்கை முழுவதும் தமிழர்களா ஆழ்கிறார்கள்? பாரதி குற்றவாளியே அல்ல. நான் கூறியதில் ஒத்துவாராததாக ஏதாவது இருப்பின் திரு. வண்ணை ஆனந்தன் அவர்கள் அடுத்த இளைஞனில் விளக்கம் தந்து சுட்டிக்காட்டினால் இந்த தமிழன் பலதையும் அறியும் வாய்ப்பு கிட்டும்.

-ராஜா சிவகுமார்-

உங்கள் தேவை எதுவானாலும் அனைத்தையும் பூர்த்தி செய்ய நாடுங்கள்!

சிவா ஆசியன் மார்க்கட்

பசுமையான காய்கறிகளா? இலங்கை, இந்திய கடலுணவுப்பொருட்களா? வீடியோ, ஓடியோ, சீடிக்களா, வார-மாத பத்திரிகைகளா, பலசரக்குப் பொருட்களா, வைபவ தேவைப்பொருட்களா, பெரியோர், சிறியோருக்கான, நவீன ஆடை அணிகளா? பட்டுப்புடைவைகளா, குர்தாக்களா, உங்கள் தேவை எதுவானாலும் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!



SIVA ASIAN MARKT, Zweibrueer Str. 3, 66424 Homburg (Saar), Germany

## இது எப்படி இருக்கு?

இரண்டு நண்பர்கள் ஒரே அறையில் வாழ்ந்து வந்தார்கள். இருவருமே ஒன்றாக சமைத்து, வாங்கிய பொருட்களின் விலைகளையும் சம பாதியாக பங்கிட்டு கொண்டார்கள். சில நாட்கள் செல்ல இருவருக்கும் இடையில் மனத்தாக்கல் ஏற்பட இருவரும் தனித்தனியே சமைத்து சாப்பிட துவங்கி விட்டார்கள்.
இதில் ஒருவர் மற்ற நண்பர் இல்லாத வேளையல் அவரின் பொருட்களை எடுத்துப் பாவிக்க துவங்கிவிட்டார். தனது பவுடர் ரின்னை அலுமாரியில் வைத்துவிட்டு மற்றவரின் பவுடரை பூசி வந்தார். ஒருமாதம் செல்ல பவுடர் ரின்னில் பவுடர் முடிந்துவிட்டது. புதிய ரின் வாங்கும் நோக்கம் தனது நண்பருக்கு இல்லை என்பதை உணர்ந்த நண்பர் இனி தனது பவுடர் ரின்னைத்தான் எடுக்கவேண்டும் என்று நினைத்து தனது அலுமாரியை திறந்து தான் வாங்கிய பாவிக்காமல் இருக்கும் பவுடர் ரின்னை எடுத்து கையில் கொட்டினார். என்ன அதிசயம் அந்த புதிய ரின்னில் பவுடர் இல்லாமல் வெறும் ரின்னாக இருந்தது.
புதிதாக கடையில் வாங்கி பாவிக்காமல் தனது அலுமாரியில் இரந்த பவுடர் ரின் வெறுமையாக இருந்தது எப்படி? திகைத்துப்போய் நின்றார்.
பின்புதான் அவருக்கு விளங்கியது, தளனது கைவண்ணத்தைத்தான் தனது நண்பரும் கையாண்டு இருக்கின்றார் என்ற உண்மை.
வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.

-சுவிஸிலிருந்து
திருவாளர் அகதியார்-

## வெளிநாட்டு மாமா!

மழலை 1: பட்டாசை கொளுத்தாதே, பட்டாசை கொளுத்தாதே!

மழலை 2: ஏன்?

மழலை 1: வெளிநாட்டு மாமா பயந்து ஓடியிடுவார்.

-வை. யோகேஸ்-



# சிரித்து இரன்

## சிலோன் சின்னத்துரையும், ஐரோப்பா ஐயாத்துரையும்

### திருமண வைபவத்திற்கு குடும்பமாய் வராதீர்!

சிலோன் சின்னத்துரை: சுத்தரத்தானிண்ட கலியாண வீட்டுக்கு சிவத்தான் குடும்பமாய் போய், மொய்யும் குடுத்திட்டு வந்தவனாம். அதுக்கு பிறகும் சுந்தரத்தான் சிவத்தானோட கதைக்கிறது இல்லையாம் ஏன்எண்டு உங்களுக்கு தெரியுமே அண்ண?

ஐரோப்பா ஐயாத்துரை: சுத்தரத்தானிண்ட கலியாணத்துக்கு சிவத்தான் குடும்பமாய் போனது உண்மைதான். மொய் குடுத்ததும் உண்மை தான். பலகாரம் மத்தியான சாப்பாடு, கோலா எண்டு அவனும், மனிசியும் 4 பிள்ளைகளும் சாப்பிட்டதுபோக, குசினிக்க இருந்த விஸ்கியும் 1/2 போத்தல் குடிச்சிட்டானாம். கணக்குப்போட்டு பார்த்தால் 150 ரூபாவாம். குடுத்த மொய் 50 ரூபாதானாம். பிறகு எப்படி சுந்தரத்தான் அவனோட சிரிச்சு கதைப்பான்?

சிலோன் சின்னத்துரை: ???!!!. . . .

### அகதிகளின் அலங்(கோல)கார திருமணம்!

சி. சி: மணவறைக்கு பக்கத்திலை நிற்கிற பொம்பிளைய எிலை கூறை சாறியோட நிறைமாதமாய் ஒரு பொம்பிளை நிற்கிறாவள்ளே அது யார்? அண்ண.

ஐ. ஐ: அது தான் மணப் பெண்.

சி. சி: ???!!!. . . .

### பசுத் தோல் போர்த்த புலிகள்.

சி. சி: சிங்கள ஆமிக்காரர் பசுமாடுகளை கொன்று தோலை உரிச்சு பார்க்கிறாங்களாம். ஏன் எண்டு ஒண்டுமாய் விளங்குதில்லை.

ஐ. ஐ: சிங்கள தலைவர்மார் சொன்னவையாம் தமிழர் எல்லாம் பசுத்தோல் போர்த்திய புலிகள் என்று அதுதான் அப்பிடி செய்யிறாங்கள் போல கிடக்கு.

### தோடுடைய செவியன்.


சி. சி: சுத்தரத்தானிண்ட மகளிண்ட கலியாணத்தின் போது சீதனமாய் 20 சோடி தோடும் குடுத்தவையாம். ஏன் இவ்வளவு தோடு?

ஐ. ஐ: மாப்பிள்ளையும் தோடு போடுபவராம். அதுதான்

சி. சி: மாப்பிள்ளை கட்டுக்காய், அதோட தோட்டுக்காய் என்று சொல்லுங்கோ.

-ரவிசெல்லத்துரை-


### நியாயமா. . . ?




கண்ணே!
உன்னை நான்
உயிருக்கு உயிராய்
காதலித்தது
உண்மைதான். . . . .
அதற்காக
என்னை நீ
திருமணம் செய்ய
நினைப்பது நியாயமா?

-மதிசண்முகராஜா-

(இக்கவிதை 'கவிதைகள் உலகம்' பகுதிக்கு வந்தது. ஆனால், 'சிரித்து இரன்' பகுதிக்குத் தான் இந்தக்கவிதை தகுதியானது. -இளைஞன்-)



# அந்தநாள் முதல் இந்தநாள்வரை...

**தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சிறுவயதில் எப்படி இருந்தார், அதன் பிறகு ஒவ்வொரு காலகட்டத்திலும் எப்படி இருந்தார் என்பதைக் காட்டும் அபூர்வ படங்கள்!**




# சித்தி விநாயகர்

# SITHE VENAYAKAR



உங்கள் அன்றாட தேவைகளுக்கேற்ப வீட்டிற்குத் தேவையான -
* பல சரக்கு சாமான்கள், * தங்க நகைகள், * எவர்சில்வர்ப் பொருட்கள், * பட்டுப் புடைவைகள், * வீடியோ & ஓடியோ கேசட்டுக்கள், * துணி வகைகள், * அலங்காரப் பொருட்கள், * மற்றும் அனைத்துப் பொருட்களையும் எம்மிடம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Hollandische Str 115, 341271 Kassel**

**-Tel: 05621/ 89 19 13, Privat: 05621/ 73 87 5-**

# தடுமாறும் இராணுவ முனைப்புக்கள்

தப்பியோடிய ஆயுதப்படையினரை மீண்டும் வந்து இணைந்து கொள்ளுமாறு சந்திரிகா அரசு அழைப்பு விடுத்திருக்கின்றது. இவ்வாறான விடுக்கப்படுவது இதுதான் முதற்தடவை அல்ல. சந்திரிகா பதவியேற்ற காலம் முதல் அடிக்கடி இந்த அழைப்பு விடுவிக்கப்படுகின்றது. இதற்கான காலக்கெடுக்களும் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஆனால், இந்தக் காலக்கெடுக்குள் வெறுமனே காலாதியாகின்றனவே தவிர வேறு எதுவும் நடைபெறுவதில்லை. இதனால்தான் காலக்கெடு அடிக்கடி நீடிக்கப்படுகின்றது.

இறுதியாக ஜூன் 30 ம் திகதியாகவிருந்த காலக்கெடுவை ஜூலை 31 வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. தப்பிச் சென்றவர்கள் மீண்டும் வந்து இணைந்து கொள்வதற்கு வசதியாகவே இக்காலக்கெடு நீடிக்கப்பட்டதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்திலிருந்து சுமார் 26,000 பேர் தப்பியோடி தலைமறைவாக இருக்கின்றார்கள் என்பது சந்திரிகா அரசுக்கு பெரும் தலையிடியைக்கொடுக்கும் ஒரு சங்கதிதான். இது பல்வேறு தரப்பட்ட பரிச்சனைகளை இன்று நாட்டில் தோற்றுவித்திருக்கின்றது.

இதில் உடனடியாக அரசாங்கம் முகம் கொடுக்கவேண்டியுள்ள பிரச்சனைகள் இரண்டு.

முதலாவது இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆள் தட்டுப்பாடு. இரண்டாவது, இராணுவத்தை விட்டு வேளியேறியவர்கள் கொலை - கொள்ளை போன்ற பல குற்றச்செயல்களில் ஈடுபட்டிருப்பது!

இந்த இரண்டு பிரச்சனைகளையும் உடனடியாகச் சமாளிக்கும் நோக்கத்துடன்தான் தப்பியோடியவர்களை உடனடியாக மீண்டும் வந்து இணையுமாறு அரசு அழைப்பு விடுத்திருக்கின்றது. ஜூலை 31 க்கு முன்னதாக வந்து இணைபவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது!

இராணுவச் சேவை என்பது ஒரு நாட்டின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சேவையாகும். தேசத்துனுடைய பாதுகாப்பே இவர்களுடைய கைகளில்தான் இருக்கின்றது. இதனால் ஒழுக்கமும், கட்டுப்பாடும் இவர்களிடம் கடுமையாக எதிர்பார்க்கப்படுகின்றன.

இராணுவத்தைப்பொறுத்தவரையில், அதிலிருந்து தப்பிச் செல்வது பாரிய ஒரு குற்றமாக அல்லது கட்டுப்பாட்டை மீறிய ஒரு செயலாகவே கருதப்படுகின்றது. இவ்வாறு தப்பி ஒடிய ஒருவரை பொது மன்னிப்பு அளித்து வருந்தி அழைக்கும் வழமை உலகில் எங்குமே காணப்படாத ஒன்று.




யாழ்ப்பாணத்தில் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு, பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப்பொருட்கள் இறக்கப்படுகின்றது

இவ்வாறனவர்கள் கைது செய்யப்பட்டால் அல்லது சரணடைந்தால் இராணுவ நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் படியே இவர்கள் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் இவ்வாறான நடைமுறை ஒன்று இங்கு இல்லை. இவ்வாறான விசாரணை நடப்பட்டால் தப்பியோடியவர்கள் மீண்டும் வந்து இணையமாட்டார்கள் என அரசு அஞ்சுகின்றது. இதனால்த்தான் பொது மன்னிப்பு தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது!

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தப்பிச்சென்றவர்கள் திரும்பாவிட்டால் என்ன நடக்கும்?

ஜூலை 31 க்குள் சரணடையாத இராணுவத்தினருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படாது என அறிவித்துள்ள அரசாங்கம், அவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு விஷேட பொலீஸ் பிரிவு ஒன்றையும் அமைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஆகஸ்ட் 1 ம் திகதி தொடக்கம் தலைமறைவாகவுள்ள இந்த இராணுவத்தினரைக் கண்டுபிடிப்பதற்காக பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை முடுக்கி விடவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது கைதுசெய்யப்படும் இராணுவத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். அரசாங்கம் கடுமையான தொனியில் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ள போதிலும்கூட, 1,000 பேர் மட்டுமே ஜூன் 30 ம் திகதி வரையில் சரணடைந்ததாக இராணுவத்தின் உத்தியோகபூர்வமான தகவல் ஒன்று தெரிவித்தது. எனினும் இத்தொகை மிகவும் குறைவு என சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜே.வி.பி. தொடர்பு?

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீளச் சேர்த்

துக்கொள்வதில் அரசாங்கம் இந்தளவுக்கு அக்கறை காட்டுவதற்கு இராணுவத்திலுள்ள ஆட் பற்றாக்குறை மட்டும்தான் காரணமல்ல.

தென்பகுதியில் அண்மைக் காலங்களில் பெருமளவு கொலை -கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. முழு நாட்டையுமே அதிர்ச்சியடையச்செய்யக் கூடிய அளவில் மாத்தளை மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஏழு பேர் கோரமாகக்கொல்லப்பட்டனர். நாட்டின் பல பகுதிகளிலும் ஆயுதபாணிகளாக இராணுவ உடையில் செல்வோரால் பாரிய கொள்ளைகள் நடத்தப்பட்டுள்ளன. கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் பல தொடர் கொள்ளைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவை அனைத்திலும் உள்ளூர் கொள்ளைக்கோஷ்டிகள் சம்பந்தப்பட்டிருந்தாலும், இராணுவத்திலிருந்து விலகியவர்களே இவற்றிக்குப்பெருமளவில் உதவியிருக்கிறார்கள். இராணுவத்திலிருந்து தப்பும்போது இவர்கள் 'சும்மா' வரவில்லை. தம்முடைய ஆயுதங்களையும் சீருடைகளையும் கொண்டே வந்திருக்கின்றார்கள்!

இந்த ஆயுதங்களும் சீருடைகளுமே இவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க உதவுகின்றன!

இந்த நிலை அரசாங்கத்திற்கும் பெருமளவு நெருக்கத்தையும், சங்கடத்தையும் கொடுத்துள்ளது. இவற்றில் சம்பந்தப்பட்டவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற குரல்கள் பலமாக ஒலிக்கத்தொடங்கின. இதன் பின்னரும் பொறுக்க முடியாது என்ற நிலையிலேயே, நேரடி நடவடிக்கைகளில் இறங்குவதென்ற முடிவை அரசு மேற்கொண்டது.

இதனைவிட தப்பிவந்த இராணுவத்தினர் சிலர் ஜே. வி. பி. அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகமும் அரசுக்கு உள்ளது. ஏனென்றால் ஜே. வி. பி. -யின் கோட்டையாகவிருந்த மாத்தளை, அம்பாந்தோட்டைப் பகுதிகளைச்சேர்ந்த இராணுவத்தினரே பெருமளவுக்கு ஆயுதங்களுடன் தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் ஜே. வி. பி. புத்துயிர் பெறுவதாகவும் அரசின் புலனாய்வுத்தகவல்கள் தெரிவித்தன.

இதனைத்தொடர்ந்தே ஜே. வி. பி. கால வன்செயல் சம்பவங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தபின் விடுதலையான பல இளைஞர்கள் இப்போது மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அதாவது ஜே. வி. பி. தொடர்பாக அரசும், அரசின் புலனாய்வு நிறுவனங்களும் மிகவும் விழிப்பாக இருப்பது தெரிகின்றது!

நாட்டில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படக்கூடாது என்பதுடன் சட்டம் -ஒழுக்கங்களை பாதுகாக்க வேண்டும் என்பதும் தப்பியோடிய இராணுவம் தொடர்பான கடும் நிலைப்பாட்டை அரசாங்கம் கடைப்பிடிக்க காரணமாகலாம்!

## சமுர்த்தி இராணுவம்

இருந்தபோதிலும் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு போதிய படைபலம் இல்லாததுடன் தப்பியோடிய இராணுவத்தினரைத் தேடிப்பிடிப்பதற்கு பிரதான காரணமாகவுள்ளது என்பதைச்சொல்லத்தேவையில்லை. இராணுவத்திற்கும் புதிதாக ஆட்களைத் திரட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தது தொடர்பாக கடந்தமாத இதழில் விரிவாகப் பார்த்தோம்.

இந்த முயற்சிகள் தோல்வியடைந்ததன் பின்னணியிலேயே தப்பியோடியவர்களைத் தேடிப்பிடிக்கும் திட்டத்தை அரசாங்கம் விரிவுபடுத்தியிருக்கின்றது. இருந்தபோதிலும் இது எதிர்பார்க்கும் வெற்றியைத்தராது என்ற அச்சமும் அரசுக்குள்ளது.

அதனாத்தான் 'சமுர்த்தி சமாதானப்படை' என்ற பெயரில் இராணுவத்திற்கு ஆட்களைத்திரட்டும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தச் சமாதானப்படைக்கு 10, 000 பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

உணவு விநியோகம் மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்காகவே இப்படை அமைக்கப்படுவதாக உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஒரு மாதகால ஆயுதப்பயிற்சி வழங்கப்படும். அத்துடன் மாதாமாதம் மூவாயிரம் ரூபாவும், இராணுவத்திற்கு வழங்கப்படுவது போன்ற ஏனைய சலுகைகளும், கொடுப்பனவுகளும், வசதிகளும் வழங்கப்படும். மரணமடைந்தால் இராணுவத்திற்கு வழங்கப்படுவது போன்ற நட்டஈடும் வழங்கப்படும்.

குடாநாட்டு மக்களுக்கு உதவுவதற்கான ஒரு சமாதானப்படையாகவே இது அமைக்கப்படுவதாக அரசாங்கம் காட்டிக்கொள்கின்ற போதிலும் இதில் பல கேள்விகள் எழுகின்றன.

நிவாரண - உதவி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கே இப்போது ஆட்கள் திரட்டப்படுகின்றார்கள் என்றால் அவர்களுக்கு ஆயுதப்பயிற்சி எதற்காக?

நிவாரண - உதவி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே பெருந்தொகையான இளைஞர்கள் இருக்கின்றார்கள். எனவே அவர்களைப் பயன்படுத்தாமல் தென்னிலங்கையிலிருந்து ஆட்களைக் கொண்டுசெல்ல வேண்டிய அவசியம் என்ன?

இந்தக்கேள்விகள் இரண்டுக்குமான பதில்களை ஆராயும் போது சமாதானப்படை என்ற பெயரில் இராணுவப் படை ஒன்றை அங்கு நிலை நிறுத்துவதற்கு அரசாங்கம் முற்பட்டுள்ளமை தெளிவாகின்றது. அவசரமாக குடாநாட்டுக்குத் தேவையாகவுள்ள 10, 000 இராணுவத்தை இதன்மூலம் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது. குறுகிய கால இராணுவப்பயிற்சியுடன் இவர்களை யாழ்ப்பாணத்தில் நிறுத்துவதன் மூலம் புலிகளின் ஊடுருவல்களை ஓரளவுக்காகவாவது கட்டுப்படுத்த முடியும் என அரசு நம்புகின்றது.

இன்றைய நிலையில் அரசுக்கு இதனைவிட வேறு எந்த வழியும் இல்லை என்பதும் உண்மைதான்!

ஆனால், ஆயுதப்பயிற்சி பெற்று தோளில் துப்பாக்கியையும் ஏந்தியவாறு 'ச


தொடர்ச்சி 23ம் பக்கம்...



புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை இராணுவத்தினர் பார்வையிடுகின்றனராம்...?

# அர்த்தமுள்ள மற்ற இந்துமதம்

ஒரு மனிதன் மூன்று நிலைகளில் இருந்து விவாதம் தொடுக்கிறான்.
* பகுத்து அறிந்து.
* கிட்டத்தட்ட.
* கேள்விப்பட்டதை வைத்து.
ஆகிய மூன்று நிலைகளில் இருந் தும் விவாதங்கள் முளைக்கும்.
நண்பன் ரமேஷ் வவுனியன் வைகாசி இதழில் தஸ்லிமாவைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'உல கின் கவனத்தை ஈர்ப்பதற்காக இசகு பிசகாக எழுதினார்' என்று குறிப்பிட்டார்.
தஸ்லிமா அக்காவைப்பற்றி உமக் குக் கனக்கத் தெரியுமோ? என்று நான் வேட்டியைத் தூக்கிச் சண்



டியன் கட்டுக்கட்ட, வவுனிய னுக்கு வந்ததே கோபம். அங்க, இங்க திரிஞ்சு தேடிப்பிடித்து, எடுத்து தஸ்லிமாவைப்பற்றிய 'கிட்டத்தட்ட' தகவல்களைக் கொட்டோ கொட்டென்று கொட் டிவிட்டார். தஸ்லிமா ஏன் எழு தினார், என்ன எழுதினார், எதற் காக எழுதினார் என்ற தகவல்க ளையும் பிந்தித்தான் அறிந்திருக் கிறார்.
ஆக மொத்தத்தில் வவுனியனுக்கு இப்போது புரிந்துவிட்டது, தஸ் லிமா 'பெண்கள் பிரஞ்ஞை' பற்றி எழுதினாரே தவிர, உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக அல்ல. தற்போதுதான் வவுனியன் தஸ் லிமாவை மலை உச்சியில் நின்று பார்த்திருக்கிறார்.
இக்கட்டுரையை எழுத ஆரம் பித்த பின்னர், எத்தனையோ பேர் எதிர் விமர்சனம் எழுதியி ருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆடி இதழில் நாடி நரம்புகள் அசையா வண்ணம் ஒரு பிடிபி டித்து விட்டார் மதி சண்முக ராஜா அவர்கள். பாராட்டுக்கள் (வயிற்றெரிச்சலுடன்).
உலக மக்களில் பெரும்பாலோ னோர் ஏதோவொரு மதத்தவர்க ளாக இருக்கிறார்கள், அத்தனை பேரம் அம்மதங்களைப்பற்றி நடப் பவர்கள் அல்ல. இப்படியொரு பந்தியை ஏன் எழுதினீர்கள்? நான் மதத்தைப் பின்பற்றுபவர்க ளைக் கண்டிக்க வில்லையே? மதத்தின் பெயரால், பக்தியின் பெயரால் நடைபெறும் அநீதி களை, மிருகச்செயல்களை கூடுமானவரை சுட்டிக்காட்டுவதற் கல்லவா வெளிக்கிட்டேன்.
பரமசிவம், குட்டி ஆடு என்றெல் லாம் தலைப்பு வைக்கச்சொல்லி விண்ணப்பித்திருந்தீர்கள். உங் களுடைய தாத்தா, பாட்டியின் பெயரையெல்லாம் என் கட்டுரை யில் வைத்துப்பார்க்க உங்களுக்கு அவ்வளவு ஆசையா என்ன?
ஒரு மதத்திற்கு கேவலம் ஒரு சினிமாவின் தலைப்பை உதார ணம் காட்டியிருக்கிறீர்கள் என்றும் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். சினிமா உங்களுக்கு அவ்வளவு கேவலமாகப் போய்விட்டதா?
ஐந்து ஏக்கர் நிலப்பரப்பு மரங் களை ரஜனியும், குஷ்புவும் சுற் றிச்சுற்றி வந்து பாட்டுப்பாடி விட்டு, நூறு வில்லன்களுடன் ரஜனி பறந்து பறந்து சண்டை போடும் இந்தியத் தமிழ்ச்சினி மாக்களை கண்கொட்டாமல் முளித்து முளித்து பார்த்துவிட்டு இதுதான் சினிமா உலகம் என்று நீங்கள் நினைத்தால் அது என் தவறல்ல, உலகளாவிய உண் மையான சினிமாக்களைப் பற்றி கொஞ்சமாவது கேள்விப்பட முயற் சியுங்கள்.
இரா. மோகனராஜா தன் தலைப்பை மாற்றியமைக்காத பட் சத்தில் அவரது கருத்துக்குப் பதில் சொல்வதில் அர்த்தமில் லையென்று உங்கள் எழுது கோலுடன் ஓர் ஒப்பந்தம் செய்து, தொட மாட்டேன், எழுத மாட் டேன் என்று பிடிவாதம் பிடிக் காமல் ஏன் பதிலெழுதினீர்கள்? ஏன் விவாதம் தொடுத்தீர்கள்?
ஆனால், ஒன்று மட்டம் உண்மை. உங்கள் பிடிவாத சத் தியங்களையெல்லாம் காற்றில்ப் பறக்கவிட்டுவிட்டு, உங்கள் வெண்டிக்காய் விரல் இடுக்குக ளுக்குள் எழுதுகோலைச் சொருக வைத்ததே, எழுத வைத்ததே இந்தத் தலைப்புத்தான் கண்ணு. இந்தத்தலைப்பை மட்டும் நான் வைத்திராவிட்டால் உங்கள் எண் ணக் குதிரைகள் இன்னும் அரைத் தூக்கத்தில்தான் கிடந்திருக்கும்.
தவிர; தலைப்பைக் கண்டனம் செய்யும் கடைசி ஆள் நீங்களாகத் தான் இருக்கப் போகிறீர்கள்.
காரணம், இனிமேல் இக்கட்டுரை தொடராது. ஏனென்றால், ஒரு விடயத்தை சுதந்திரமாக எழுத வெளிக்கிட்டபின் அதற்குள் வரையறை, கட்டுப்பாடு போன் றவற்றைத்திணிப்பது என்பது எனக்குப்பிடிக்காத விடயம். நான் ஆசிரியராகக் கடமையதற்றும் சஞ்சிகையில் கூட எழுதாமல், 'இளைஞ'னில் எழுத முற்பட்ட தற்கு இரண்டு காரணங்கள்.
1. அச்சஞ்சிகை யாப்பிற்கு உட் பட்டது.
2. 'இளைஞன்' யாப்பிற்கு உட்ப டாதது.
இதைவிட இளைஞன் ஆசிரியர் சேகர் எனது வாடா, போடா நண்பன். இதற்கிடையில் சின் னதாக ஒரு Flash Back.
நான்கு வருடங்களுக்கு முன் நான் எழுதி இயக்கிக் கொண்டிருந்த ஒரு நாடகத்தில் வரதட்சணை வாங்கித்தான் திருமணம் முடிப் பேன் என்று அடம்பிடிக்கும் ஒரு வக்கற்ற வாலிபனின் பாத்திரத் திற்கு ஆள்தேடிய போதுதான் எங் கள் நட்பு ஆரம்பமாகியது.
புதிதாக ஒரு பத்திரிகை ஆரம் பிக்க வேண்டுமென்ற ஆர்வம் சேகருக்குத் தலைகாட்டிக்கொண் டிருந்த நேரமது.
'நான் பத்திரிகை ஆரம்பித்தால் உனக்கு முழுச்சுதந்திரம் தருகி றேன், உன்னுடைய முரண்பா டான எண்ணங்களை, முற்போக் குச் சிந்தனைகளை என் பத்தி ரிகையில் எழுது' என்று அப்பவே எனக்குச்சொல்லி வந்தார் சேகர். அந்த உத்வேகத்தில்த்தான் எனது எண்ணங்களை இளைஞனில் எழுதிவந்தேன். ஏகலைவன் என்ற புனைபெயரில் எழுதியதும் நான்தான். இப்போது என்னடா வென்றால், எனது கட்டுரை தொடர்பாக ஒரு மாற்றம் கொண் டுவர வேண்டுமென்கிறார். அதாவது இனிமேல் இக்கட்டுரை தொடரவேண்டுமாயின் தயவு செய்து தலைப்பை மாற்றிவிட்டு எழுது என்கிறார்.
ஏனென்றால், பத்திரிகையின் வளர்ச்சிக்கு இத்தலைப்பு பாதக மாக உள்ளதாக சேகர் நினைக் கிறார். ஆகவே, தலைப்பு மாற் றப்பட வேண்டும்.
முடியாது!
என்னால் முடியாது, வரையறை கள், கட்டுப்பாடுகளைச் சுமந்து கொண்டு என்னால் எழுத முடி யாது. இந்து மதத்தவர்களின் குறைகள் சுட்டிக்காட்டி முடியும் வரை இத்தலைப்பு இரந்து கொண்டுதானிருக்கும். இதில் மாற்றமிருக்காது. ஆகவே, கட் டுப்பாட்டுக்கு நான் கட்டுப்பட மாட்டேன் என்று சேகருக்குச் சொல்லிவிட்டேன். இதனால் இனிமேல் இக்கட்டுரை தொட ராது.
என்னுடன் வாதம் தொடுத்த அத் தனைபேருக்கும் வாழ்த்துக்கள். அன்புடன் விடைபெறுகின்றேன்.

-இரா. மோகனராஜா-

## கட்டுரையை மதங்களுடன் ஒப்பிடுங்கள் இந்துக்களை தாக்குவதற்கல்ல!

இரா. மோகனராஜாவின் கட்டுரை யின் தலைப்பு நேரிடையாக ஓர் சமயத்தை தாக்குவதாக இருப்பி னும் சில கருத்துக்கள் வரவேற்கத் தக்கதாயும், இந்துக்களை சிந்திக் கத்தூண்டுவதாயும் இருந்தன. ஆனால், இன்றளவில் கட்டுரை தடுமாறி அர்த்தமற்றதாகிக் கொண் டிருக்கிறது.
கட்டுரையின் நோக்கத்தை கைவிட்டுவிட்டு தாக்குதல் திட் டத்தோடு தொடர் எழுதுகிறார் போலும்.
எதற்குமே இரண்டு பக்கங்கள் உண்டு. அது எதுவாகவிருந்தாலும் சரி. ஏனெனில் எல்லாவற்றையும் ஆக்கியதும் மனிதனே அதை ஆண்டு அடிமைப்படுவதும் மனி தனே. குற்றம் உன்னிடம் ஒன்று என்றால், என்னிடம் மூன்று என் பது இந்துக்களின் தத்துவம்.
எம்மவர்கள் நகை அணிவதும், எரிச்சல் படுவதும் இந்துமதக் கொள்கையல்ல. ஆனால், அவர் கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருப் பது இந்துமத வழிகாட்டல். இதேபோல் வெள்ளைக்காரன் வச திற்கேற்ப வாழ்வதும் ஒழுக்கம் கெட்டு யாரும் யாரோடும் எதுவும் எப்படியும் என்ற நிலை இது கிறித் தவ கோட்பாடோ நானறியேன். ஆனால், எல்லோரும் புத்திவான் களுமல்ல, புத்தியற்றவர்களுமல்ல. ஆகவே தான் மதங்கள் மதங்க ளாக இல்லை. அத்தோடு இரா.- மோகனராஜா கட்டுரையின் வேகத்தில் களங்கிப் போனாரா, கலங்கிப் போனாரா? என்பது புரி யவில்லை. ஏனெனில் இந்துக்க ளின் கதைகள் பிள்ளைகளிடம் பொறாமை, வஞ்சகம் போன்ற தீய பழக்கங்களை மனோரீதியில் பெறு கிறார்கள் என்பது நகைப்புக்குரி யது. பிள்ளையாரும் முருகனும் மாம்பழத்திற்கு சண்டை போட்டார் கள் என்பது மோகனராஜாவின் வாதமாகலாம். ஆனால், தாய் தந்தையரை மதித்து வணங்குவது எப்படி, ஏன் எபதை இந்துக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.
ஐயா, இந்தக்கதைகளை விடுங் கள் இயேசு பெருமான் ஒரு கன் னியின் வயிற்றில் வந்து பிறந்த புனிதக்கதைக்கு என்ன காரணம் சொல்வீர்கள்? இன்றுகூட இரா சேந்திரம் முடமானவர்களை நடப் பிக்கின்றார் ஏன், எப்படி?
போதையிலும் அறிவை பொழிந்து வாழ்வதற்கு சுவை தந்த ஒரு சிறந்த இலக்கிய படைப்பாளனை செருப்பால் அடிப்பது உங்கள் சொந்த விருப்பு. அந்தச்சொற் களை தவிர்த்து நயமாக கூறவி ளைவது இந்துக்களின் மாண்பு.
இன்னுமொன்று கண்ணதாசன் எனக்கு பாட்டனல்ல. ஆனால், ஓர் சிறந்த இலக்கிய கர்த்தா. அவனை நீங்கள் கிழற புறப்பட்டு பதைத்து விடுவீர்கள். ஏனென் றால், செத்த பாம்பை அடிப்பது போல் வாசகர்களுக்கு வந்துவி டும்.
அவன் வேசியின் வீட்டிலனுப வித்த இன்ப துன்பத்தைக்கூட சுயமாகவே எழுதிவிட்டான். அறிஞர் அண்ணாவிடம் கூட ஓட்டை கண்டு குதப்பி தன்னை ஏலம் போட்டுவிட்டவனை நீங்கள் கிழற வேண்டியதற்கு ஒன்று மில்லை. கட்டுரையை மதங்களு டன் ஒப்பிடுங்கள். இந்துக்களை தாக்குவதற்கல்ல.

-முரசூர். பழ. தியான்-

## உட்கருத்துக்களின் வெளிப்பாடே தலைப்பு!

இந்துமதத்தை அக்கு வேறு, ஆணி வேறாக கரைத்துக்குடித் துவிட்ட மோகனராஜாவின் ஏப் பத்தில் உருவெடுத்த கட்டுரைத் தொடருக்கு மோகனராஜா அர்த் தமின்றி விமர்சகர்களுக்கு பதில் கொடுப்பது மிகவும் வருத்தத்தைத்

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

பெண் குலத்தில் கற்புக் கரசிகளாக கண்ணகி, சீதை, அருந்ததி என அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், ஆண் குலத்தில் ஒருவன் கூட இருக்காததன் காரணம் எதுவாக நீங்கள் கருதுகிறீர்கள்?

-ஏகாந்தப்பிரியா, புங்குடுதீவு-

ஆண்களின் கற்பு விஷயத்தில் உங்களுக்கு ரொம்ப சந்தேகமுங்க. கணவன், உங்களின் அப்பா, அண்ணா, தம்பிகள் இவர்களை கண்ணகிகளின் ஆண்பாலாக ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

முன்னால் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெர்மனியில் ஆட்சி புரிய நேரிட்டால்...?

-ராஜா சிவகுமார், டியூரன்-

அந்த அரிய வாய்ப்பு ஜெர்மனிக்கு கிட்டுமானால், ஜெர்மனியின் இன்றைய வேலையில்லாத் திண்டாட்டத்தை சரிபாதியாக குறைத்து விடுவார். எப்படியென்று கேட்கிறீர்களா? கட்டவுட் வைத்தல், தயாரித்தல், ஒட்டுதல் போன்ற வேலைகளால். மற்றும் ஜெர்மனியின் அரசாங்கம் அடுத்த வருட வரவு-செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையைக் நிரப்ப பல வழிகளில் சேமிப்பு முறையை கொண்டுவர முயற்சிக்கிறது. எனினும் ஜெயலலிதாவானால் தனக்கு வரும் லஞ்சப்பணத்தில் இக்குறையை நிவர்த்தி செய்துவிடுவார். ஜெர்மனியை- ஜெயமணியாக்கி தமிழ்நாட்டுக்கெதிராக யுத்தப்பிரகடனமும் அறிவிப்பார்!

பெண்ணை பெண் தான் புரிந்து கொள்வாள் என்பது ஒரு தத்துவம். நம் தமிழ் பெண்கள் இலங்கையில் சித்திர வதை படுவதை ஏன் சந்திரிகா புரிந்து கொள்ள வில்லை?

-ராஜா சிவகுமார், டியூரன்-

'கலைகளிலே ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கிறான்'

வருடம் - 03 குழந்தை - 27 ஆவணி - 1996



# முன்னால் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜேர்மனியில் ஆட்சி புரிய நேரிட்டால்...?


அரசியல் என்று வந்துவிட்டால், அதுவும் இனவெறி அரசியல் ஆனால், இன அழிப்பு நடவடிக்கையில் பெண்ணென்ன ஆணென்ன எல்லாமே ஒன்று தான். அழிவது பொதுவாக தமிழினம்தான். இது சந்திரிகா என்ன அவரைப்பெற்ற அம்மாவானாவென்ன எல்லாமே கொள்கை ஒன்றுதான்!

ஆரம்பகட்டத்தில் இருக்கும் வளரும் இளைய எழுத்தாளர்களுக்கு தாங்கள் கூறுவது...?

-எஸ். சுரேந்திரன், ஜெர்மனி-

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் குட்டிக்கதை ஒன்று.
இந்தக்கதை எனக்கு பொருந்தாது. தங்களுக்குப் பொருந்துகிறதா என்று பாருங்கள்.

நகைக் கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது.
"எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே...?" என்று ஓலமிட்டது.
தெருவோரத்தில் கிடந்த கடற்பாரை கூறியது:-
"ஏ குறுணி! காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால், இரத்தினக் கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது."


காசி ஆனந்தன்

"அப்படியென்றால்...?" என்று இழுத்தது குறுணிக் கல்.
கடற்பாரை சொன்னது:-

"நிறைவாகும் வரை மறைவாக இரு."

தங்களிடம் கேள்வி கேட்பவர்கள் தங்கள் நிரந்தர முகவரியைத் தராமல், தற்காலிக வெளிநாட்டு விலாசத்தை தருகின்றார்களே. ஏன் சொந்த முகவரியைத் தந்தால் என்ன?

-மதி உதயகுமார், வவுனியா-

தமிழீழம் மலரும் வரை தமிழனுக்கென்று ஒரு நிரந்திர முகவரி உண்டா உதயகுமார்?
ஈழத்தமிழர்களின் மனநிலையை திறமையாக படம் பிடிக்க கூடியவர் 'இளைஞன்' துணையாசிரியரான ரவிசெல்லத்துரை அவர்கள். அவரின் துணுக்கு ஒன்று:-

சிலோன் சின்னத்துரை: சிலோனில சிங்கள ஆமியால பிரச்சனை என்று சொல்லி, இங்க இருக்கிற தமிழ்ச்சனம், தமிழ் ஈழம் கிடைத்தால் திரும்பி ஈழத்திற்கு போவினமே?

ஐரோப்பா ஐயாத்துரை: ஈழத்திற்கு போனால் புலியால பிரச்சனை என்று ஒரு புதுக் கதையை சொல்லி தொடர்ந்து இங்க இருக்கத்தான் பாப்பினம். தமிழனுக்கு உதுவெல்லாம் சொல்லியே கொடுக்க வேணும்.

சிலோன் சின்னத்துரை: !!!???...

இந்து மதத்தில்தான் அதிக கடவுள்கள் இருக்கிறார்கள் என்கிறான் என் நண்பன். தங்கள் பதில் என்ன?

-எஸ். நிரஞ்சன், ஜெர்மனி-

ஒரு பேச்சாளர் தனது பேச்சுத்திறமையால் எல்லோரையும் மடக்கி திக்குமுக்காட வைப்பதில் திறமைசாலி. அவர் ஒருநாள் ஒரு கிறிஸ்தவப் பாதிரியாரிடம் கேட்டார்...
'பாதர்! உங்க பைபிள் கோட்பாடுகளின்படி கடவுள் கர்த்தர் ஒருவர் தான். அவர் பிதா, சுதன், பரிசுத்த ஆவின்னு மூன்று ஆட்களாக உலகை ஆளுகை செய்கிறாரென்று சுறப்பட்டுள்ளதே! அதை எப்படி நம்ப முடியும்? நடைமுறைக்கு ஒன்றும் புரியவில்லையே! ஒரே கடவுள் எப்படி மூன்று பேராக முடியும்?'
உடனே பாதர் அவனை நோக்கி
'உனக்கு கல்யாணம் ஆகிவிட்டதா?'
'ஆகிவிட்டது பாதர்'
'மகன் உண்டா?'
'உண்டு பாதர்'
'உங்க அம்மாவுக்கு நீ என்ன முறை வேண்டும்?'
'மகன் முறை'
'உன் மனைவிக்கு?'
'கணவன்'
'உன் மகனுக்கு?'
'தகப்பன்'
'நீ எப்படி ஒரே ஆளாக இருந்து தாய்க்கு மகனாகவும், மனைவிக்கு கணவனாகவும், மகனுக்கு தந்தையாகவும் இருப்பது சாத்தியமாகும்? அதேபோல்த்தான் இறைவனும்' என்றார்.

## ஊர்வலம் போன ஓரினசேர்க்கை வாதிகள்!

சிட்னி.
ஆஸ்திரேலிய நகரங்களில் ஒன்று சிட்னி. 18 ஆண்டுகளுக்கு முன் இங்கே ஓரினச் சேர்க்கைவாதிகள் ஒன்றாக கூடி ஊர்வலம் நடத்த முயன்றார்கள். அவ்வளவுதான். சிட்னி நகர மக்களுக்கு இதை பொறுக்க முடியவில்லை. ஆகவே அந்த ஊர்வலம் அடிதடியில் முடிந்தது.

இப்போது அதே சிட்னி நகரில் ஆண் ஓரினச் சேர்க்கைவாதிகளும் பெண் ஓரினச்சேர்க்கை வாதிகளும் அமர்க்களமாக ஊர்வலம் நடத்தி வெற்றிக்கொடி நாட்டி விட்டார்கள். சுற்றுலாத் துறைக்கு இதனால் லாபம் என்பதால் ஆஸ்திரேலிய அரசும் வாயை மூடிக்கொண்டது. என்ன செய்வது? நம்நாடு (ஆஸ்திரேலியா) சகிப்புத் தன்மை உள்ள நாடு என்று அரசு அதிகாரி ஒருவர் சப்பை கட்டு கட்டி இருக்கிறார்.

இந்த ஊர்வலத்தின் மூலம் அமெரிக்காவின் பாம்ஸ்பிரிங்ஸ், கிரேக்க நாட்டின் மைனோனாஸ் ஆகிய இடங்களுக்கு அடுத்தபடி சிட்னி நகரம் ஓரின சேர்க்கைவாதிகளின் சொர்க்கமாகி விட்டது.

## பல் உடைத்த பிரதமருக்கு டாக்டர் பில் அனுப்பியவர்!

மாண்ட்ரியால்.
கனடா நாட்டு பிரதமராக இருப்பவர் ஜீன்செரடின். சம்பவத்தன்று இவருக்கு எதிராக சிலர் கோஷம் போட்டார்கள். ஜீன் செரடின் சகிப்பு தன்மையோடு அவர்கள் நடுவில் போய் சமாதானம் செய்து பார்த்தார் முடியவில்லை. எதிர்ப்பு இன்னும் வலுக்கவே கோபத்தில் கிளனெட் என்பவரின் கழுத்தை பிடித்து போலீசாரிடம் தள்ளிவிட்டார். போலீசார் அவரை லேசாக கவனித்ததில் அந்த நபரின் பல் கழன்றுவிட்டது.

இந்த சம்பவத்தை அடுத்து பிரதமர் மீது வழக்கு தொடரும்படி ஆதரவாளர்கள் பலர் கிளாெனட்டை வற்புறுத்தினார்கள். கிளெட் கேட்கவில்லை. நேராக ஒரு பல் டாக்டரிடம் போய் பொய் பல் கட்டினார். அந்த பில்லை பிரதமருக்கு அனுப்பி வைத்து விட்டார். பிரதமர் இதற்கான பணத்தை தராவிட்டால்தான் இனி பிரச்சினை வரும் என்கிறார் இவர்.

# செய்தி துளிகள்

## அரச குடும்பத்து பூனைகள்!

கெய்ரோ.
எகிப்து நாட்டில் முன்பு ஒரு காலத்தில் மன்னர் ஆட்சி இருந்தது. அப்போது மன்னர் வாழ்ந்த அரண்மனைதான் தற்போதுள்ள எகிப்து நாட்டின் பாராளுமன்றம் ஆகும். இந்த பாராளுமன்ற கட்டிடத்தை அண்மையில் சுத்தம் செய்தார்கள். அப்போது மாளிகை உச்சியில் எராளமான பூனை. குடும்பங்கள் இருப்பது தெரியவந்தது. பூனை எகிப்தியர்களுக்கு புனிதமான விலங்கு அத்துடன் வழிவழியாக அரண்மனை மாடத்திலேயே வசிப்பதால் இந்த பூனைகளின் உடலிலும் அரச குடும்ப் ரத்தம் ஓடுவதாக கதை பரவியது. இதையடுத்து ஆளுக்கு ஆள் இந்த அரச குல பூனைகளை வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டார்கள்.

## பாட்டிக்காக வாள்சண்டையிட்ட தாத்தா!

ஸ்டாக்ஹோம்.
ஸ்வீடன் நாட்டில் ஒரு முதியோர் இல்லம். இங்கே 93 வயதுக்காரர் ஒருவரும் 80 வயது ஆசாமி ஒருவரும் அவரவர் காதலியை பற்றி வர்ணித்து பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென 2 பேரின் கன்னியும் ஒரே நபர்தான் என்பது தெரியவந்தது. அந்த நபர் வேறு யாருமல்ல. அதே முதியோர் விடுதியில் இருக்கும் 80 வயது பாட்டிதான்.

இதையடுத்து 2 பேருக்கும் இடையே மோதல் வெடித்தது. 80 வயது ஆசாமிக்கு பொறுக்கவில்லை. அங்கே சுவரில் மாட்டி இருந்த பழங்கால கவசம், இரும்பு முகமூடி ஆகியவற்றை அணிந்து கொண்டார். கையில் வாளை எடுத்துக் கொண்டு எதிரியை போருக்கு அழைத்தார். எதிர்தரப்பு ஆசாமியும் சும்மா இருக்காமல் சவால் விடவே வாளால் தாக்கி அவர் தொண்டையை பிளந்துவிட்டார். நல்ல காலம் 94 வயது ஆசாமி சாகவில்லை. பிழைத்துக் கொண்டார்.

சரி! இந்த தகராறு குறித்து பாட்டியின் கருத்து என்ன? பாட்டி இவர்கள் கதைக்கே வரவில்லை. இரண்டுமே பொறாமை பிடித்த கிழங்கள் என்று ஒதுங்கிக்கொண்டார்.

## புகைப்பிடித்த பெண்ணுக்கு ரூ.18 ஆயிரம் அபராதம்!

லண்டன்.
இங்கிலாந்தை சேர்ந்தவர் ஜோகன்நாரிஸ் (வயது33) இந்த பெண்மணி லண்டன் செல்லும் விமானத்தில் பயணம் செய்தார். இந்த விமானத்தில் புகை பிடிக்க கூடாது என்று தடை உள்ளது. ஜோகன் அதை லட்சியம் செய்யவில்லை. படு அலட்சியமாக சிகரெட் பிடித்தபடி வந்தார். விமானம் லண்டனில் இறங்கிய உடன் அதிகாரிகள் இவரை கைது செய்தனர். பிறகு கோர்ட்டில் நிறுத்தினார்கள்! ஜோகன் நான் நரம்பு தளர்ச்சிக்காரி புகை பிடிக்காமல் என்னால் இருக்கமுடியாது என்று எல்லாம் நீதிபதியிடம் வாதாடி பார்த்தார். நீதிபதி கேட்கவில்லை. ஜோகன் ரூ.18 ஆயிரம் அபராதம் கட்டவேண்டும் என்று அவர் தீர்ப்பளித்து விட்டார்.

## வாசகர்கள் கவனத்திற்கு!

**தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த இதழில் 'சங்கரி' தொடர் நவீனம் இடம்பெறவில்லை.**

**-இளைஞன்-**

# சிந்திக்க வைக்கும் சித்திரம்!

-கவிதை: செ. ஜெயச்செல்வி, கனடா-


காலம் காலமாக அழுது
எம் கண்ணில் நீர் கூட
வற்றி விட்டது!

பசித்தழும் என்
பாலகனைக் கண்டு
இந்தப் பாரிலுள்ளோர்க்குத்தான்
இரக்கமில்லை!
பார்வதி...! உனக்குக் கூடவா?

பதை பதைத்தோடுகையில்
பாதை மாறிய கணவனைத்
தேடுவதா?
பிரவசிப்பது பாதியிலா?
வீதியிலா என்றெண்ணி
மாளுவதா?
வாய்கட்டிச் சேர்த்த
பொருள் விட்டு
வழி மாறிவந்த கதையினைச்
சாற்றுவதா?


சாற்றித்தான் பயன் என்ன?
எட்ட நின்று பேசும் இவ்
இரக்கமற்ற உலகத்தில்!

சுமைகள் கூட சுகம்தான்
நோக்கத்திற்காய் சுமக்கையில்!
ஓர் இனத்தின் விடுதலைக்காய்
சிலுவை சுமப்பவர்கட்காக
நாம் எச் சோகங்களையும்
சுகமாய் சுமப்போம்...!



**இளைஞன் இந்த மாத சிறுகதை**

# கல்லறைக் கனவுகள்



ம.தி. சாந்தன்

'**வெ**ற்றிவீரர் வரலாறு' என்ற நூலின் உள்ளே லண்டனிலிருந்து என் நண்பன் குறிஞ்சிக் குமரன் எழுதிய கடிதம் வைக்கப் பட்டிருக்கிறது. அக் கடிதத்தைப் பலதடவை படித்து விட்டேன். மீண்டும் படிக்க வேண்டுமென்ற ஆவல் என்னுள் எழுந்தது. எடுத்தேன்.

குறிஞ்சிக் குமரன் என் பாலிய நண்பன். முதலாவது வகுப்பில் இருந்து பத்தாவது வரை என்னுடன் படித்தவன். வீட்டில் இவன் இரண்டாவது பிள்ளை. மூத்தவர் அக்கா– வயது இருபத்தைந்து. குறிஞ்சிக் குமரனுக்கு பதினெட்டு வயது. இவனுக்குப் பின் இரண்டு தங்கைகள். இவன் வெளிநாடு செல்வதற்காகப் படிப்பை நிறுத்தி விட்டான். நிறுத்தாது விட்டிருந்தால், என்னுடன் இப்போதும் பன்னிரண்டாவது படித்துக் கொண்டிருப்பான்.

இக் கடிதம் ஓராண்டிற்கு முன்னர் எழுதப்பட்டதாக இருந்தாலும் கடிதத்தைப் பிரித்தேன்.

"அன்பிற்குரிய தமிழ்க் குமரன்– உன் உடல், உளம் நலமறிய ஆவல். நான் நலம். நான் உன்னையும், பிறந்து தவழ்ந்து – விளையாடி மகிழ்ந்த தாய்மண்ணையும், பெற்றவர்களையும், உடன் பிறந்தாரையும், வாய்க்கினிய புட்டையும், கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தையும், ஒடியலையும், பினாட்டையும் விட்டுப் பிரிந்து வந்தபின் உனக்கு எழுதும் முதல் கடிதம், இது.

என்னைப் பற்றி அறிய ஆவலாய் இருப்பாய். அதே போல்தான் உன்னைப் பற்றி அறியவும் நான் ஆவலாய் உள்ளேன் என்பதை மனதில் வைத்திரு.

எனக்கு இப்போது ஓரளவு வருமானம் கிடைக்கிறது. எனது செலவு போக எஞ்சியதை வீட்டிற்கு அனுப்ப எண்ணியுள்ளேன்.

என் வேலை என்ன? எவ்வளவு சம்பளம்? என அறிய ஆவலாய் இருப்பாய்.

என் வேலை ஒரு கல்லறையில்தான். வருமானம் நிலையானதல்ல. அவ்வப்போது மாறும். நான் இருக்கும் இடத்தைச் சுற்றி மூன்று கல்லறைகள் உள்ளன.

ஒரு நாள் எனக்கு அந்தத் திட்டம் உதித்தது. அப்போது வேலையின்றி அலைந்து கொண்டிருந்தேன். கையில் இருந்த பணம் தீர்ந்து கொண்டிருந்தது.

நான் ஒரு கல்லறையைத் தாண்டிச் செல்லும்போது, இரண்டு வெள்ளையர் 'கல்லறை சுத்தமாக இல்லை' எனத் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்ததை எனக்குத் தெரிந்த ஆங்கில அறிவைக் கொண்டு கண்டுபிடித்து விட்டேன். ஒரு மின்னல் மனதில் பளிச்சிட்டது. வேலை கிடைத்துவிட்டதென மகிழ்ச்சி.

அப்போது எனக்கு என் அம்மாவின் ஞாபகம்தான் வந்தது. பிள்ளை பெற்றவர்களின் வீடுகளுக்கு சென்றாலோ, பெண்கள் வயதிற்கு வந்த வீடுகளுக்கு சென்றாலோ, சுடுகாட்டிற்கு சென்றாலோ நான் வீடு திரும்பும் போது தலையில் நீர் சொட்டச் சொட்ட செல்ல வேண்டும்.

ஆம்– அது 'துடக்கு' என்பார், பிணம் போன பாதையால் நான் சென்றாலும், இதே நிலைதான். ஆனால், நான் கல்லறையில் வேலை செய்து அனுப்பவுள்ள பணத்தில் நகை செய்வார்கள். நிலம் வாங்கி வீடு கட்டுவார்கள், சேலை வாங்குவார்கள்.

இப்போது நான் 'துடக்கும்' பார்ப்பதில்லை துணியும் பார்ப்பதில்லை... என் வேலையின் தொடக்க நாளைப் பற்றிக் கூறவேண்டுமென எண்ணிவிட்டு, வேறு எதையோ கூறிக்கொண்டிருக்கிறேன்.

நானே கல்லறைகளைச் சுத்தம் செய்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணம் தோன்றியது. நமது நாட்டிற்கு வரும் வெள்ளையர் பற்றிய தகவல்கள் என் மனதில் ஆழப் பதிந்திருந்தன. உல்லாசப் பயணிகளாக வரும் அவர்கள் தமக்கு உதவியவர்களுக்கு வெகுமதிகள் கொடுத்து மகிழ்விப்பார்கள் அல்லவா?

என் மூளைக்கு நானே பாராட்டு வழங்கினேன். என் கையிலிருந்த காசில் ஒரு நாட்குறிப்பு வாங்கினேன். ஓட்டமும் நடையுமாக மூன்று கல்லறைகளுக்கும் சென்றேன். அங்கே கல்லறைகளில் குறிக்கப்பட்டிருந்த தேதிகளை நாட்குறிப்பில் குறித்துக்கொண்டேன். என்னைப் பாசத்துடன் தூக்கி வளர்த்த உறவினர்களது நினைவு நாள் எப்போதென்று எனக்குத் தெரியாது.

அடுத்த நாள் என் மனதை விட்டு அகலாதது ஆனது.

ஆம்– அன்றுதான் முதன் முதலில் தேம்ஸ் ஆறு ஓடும் நாட்டில் என் வேலை தொடங்கியது. கடமை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் நான் எனக்காக இந்த அந்நிய நாட்டில் வாழவில்லை. என் குடும்பத்திற்காகத்தானே!

அடுத்த நாள் நான் செல்ல வேண்டிய இடத்திற்கு ஆவலுடன் சென்றேன். என்னால் முடிந்த அளவு அந்தக் கல்லறையை சுத்தம் செய்து, அலங்கரித்து விட்டேன். என்னுள் ஒரே பரபரப்பு!

யாரும் வருவார்களா! நினைவு நாட்களை மறக்காது அஞ்சலி செய்யும் பழக்கம் வெள்ளையரிடம் உண்டு என்று நான் அறிந்திருந்தேன். எனவே, நம்பிக்கையுடன் காத்திருந்தேன். நேரம் செல்லச் செல்ல என் நம்பிக்கை தகர்ந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது.

சற்று நேரம் சென்றபின் இரு வெள்ளையர் வந்து நின்றனர். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். சுற்றுமுற்றும் பார்த்தனர். சற்றுத்தள்ளி நின்ற என்னை அழைத்தனர். நான் அவர்கள் முன் சென்று கைகட்டி நின்றேன்.

எமது ஊரில் என் முன்னால் பல வயோதிபர்கள் கைகட்டி நின்றுள்ளனர். காரணம், சாதிப் பாகுபாடு. ஆனால் இங்கே...

கைகட்டி நின்ற என்னைக் கனிவுடன் பார்த்தனர். பசி தொந்தரவு செய்ய அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்களில் ஒருவர் என்னை நோக்கி வந்து கட்டியிருந்த என் கைகளை விடுவித்து விட்டு அழைத்துச் சென்றார்.

அவரின் கையின் நிறத்தை என் கையின் நிறத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். தக்காளி போலிருந்தது, அவரது கை. எனது கையோ செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் கற்பூரம் எரிப்பதற்காக வைத்திருக்கும் தீச்சட்டி போலிருந்தது.

நான் கூச்சத்துடன் நின்றேன். அவர்களிடம் பாகுபாட்டு உணர்வே இல்லை. கல்லறையைக் காட்டி யார் சுத்தம் செய்தது என்று கேட்டனர். அவர்கள் கேட்டது என்னவென்று தெரிந்ததும் பதில் கூற முடியவில்லை. ஆங்கிலத்தில் பேசும் திறன்தான் இல்லையே!

நான்தானென சைகை செய்தேன். ஊமையா என்றனர். நான் வாய்மூடி நின்றால் அவர்கள் ஊமையென எண்ணிவிடுவர். என்பதால் 'நோ' எனச் சொல்லத் தெரிந்தும் 'இல்லை' எனத்

தொடர்ச்சி 20ம் பக்கம்...

**தமிழ்நாட்டில் மாமியார்கள் தான் சீதனப் பட்டியலைத் தயாரிப்பார்கள். நமது நாட்டில் மணப்பெண்களே அதைச் செய்கிறார்கள்!**

கர்ப்பமடைந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு பெண்களுக்குத் தோன்றக்கூடிய வாந்தி நிற்க, எலுமிச்சம் பழத்தின் ஒரு துண்டுடன் சர்க்கரையைப் போட்டு பல்லில் படாமல் நாக்கிலிட்டு சுவைத்தால் வாந்தி சமனப்படக்கூடும்.

# அறிவியல் உலகம்



## வெள்ளைப்பூண்டு விவகாரம்!

அமெரிக்கர்கள் வருடத்திற்கு 45 கிலோ வெள்ளைப் பூண்டுகளை ஏதாவது ஒரு வழியில் தின்றுவிடுகிறார்கள். 'கார்லிக்சீட் அசோசியேசன்' என்ற அமைப்பையே உருவாக்கியிருக்கிறார்கள். இப்போது இவர்கள் வெள்ளைப்பூண்டில் ஐஸ்க்ரீம் தயாரித்து விற்பனை செய்கிறார்கள். இதுதான் அமெரிக்காவில் இப்பொழுது அமோகமாக விற்பனையாகிறது. வெள்ளைப் பூண்டு உண்பதால் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் சேராது என்பதே இதற்குக் காரணம். **-என்.எஸ்.மணி.**

## சிறுமியின் அறிவு!



**கி**ரிப் என்பவருக்கு நீரிழிவு நோயும், உடலில் சர்க்கரை அளவு குறைவாகவும் இருந்தது. ...ால் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். ...அருகில் இருந்த இவருடைய ஐந்து வயது மகள் ஜார்ஜியா துரிதமாக செயல்பட்டு தந்தையை காப்பாற்றினாள். எப்படி? ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்தால் குளுக்கோஸ் கொடுப்பது வழக்கம். இதை எப்போதோ கவனித்திருந்த சிறுமி ஜார்ஜியா, ஐந்து டீஸ்பூன் அளவு சர்க்கரையை அவர் வாயில் கொட்டி பத்து நிமிடங்கள் அவரைத் தடவிக் கொடுத்தாள். மயங்கியவர் குணமானார். சர்க்கரை நோயாளிகள் மயக்கம் போடுவது சாதாரணமாக நடப்பதுதான் என்றாலும் ஜார்ஜியாவின் சமயோசித அறிவு பாராட்டத்தக்கது என்று புகழ்ந்துள்ளனர் மருத்துவர்கள்.

## யார் பாசம் பெரியது?



**தா**ய்ப்பாசம், தந்தையின் பாசம் இரண்டில் எது சிறந்தது? என்பதைப் பற்றிக்கூட இப்போது ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். தாய் பாசத்தைவிட தந்தையின் பாசமே முக்கியமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய சிறந்த பாசம் என்று சில ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிறார்கள். தாயைவிட கண்டிப்புடனும் கடமை உணர்வுடனும் தந்தைகளே பாசம் காட்டுகிறார்கள். இதனால் பெரும்பாலும் தந்தைகளிடம் வளரும் குழந்தைகளின் அறிவுத்திறன் தாயிடம் வளரும் குழந்தைகளின் அறிவுத் திறனைவிட அதிகமாக இருக்கிறது. தன் குழந்தை வாழ்ந்தால் போதும் என்கிற அளவில் அதன்மீது பாசம் காட்டி வளர்ப்பவள் தாய். ஆனால் தன் குழந்தை எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்ற கடமை உணர்வில் கட்டுப்பாட்டுடனான பாசம் காட்டி வளர்ப்பது தந்தைதான் என்கிறார்கள். எதற்கும் உங்கள் வீட்டில் கேட்டுப் பாருங்களேன்!

**புதுவகையான பசும்புல்!**

**ஆடுமாடுகளுக்குக் கூட தீவனம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதைத்தவிர்ப்பதற்காக கனடாவில் புதுவகையான பசும்புல் ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள். நோய் எதிர்க்கும் திறன் அதிகம் கொண்ட இந்த புல் களிமண், மணல் போன்ற எல்லா வகையான நிலங்களிலும், எல்லா வகையான புருவங்களிலும் செழித்து வளரும் இந்த புல்விதைகளை விதைத்த ஐந்தாவது நாளே பசுமையான தடித்த புற்கள் அடர்த்தியாக வளர்ந்து விடும். மூன்று வாரங்களில் நீளமாக வளர்ந்து அறுவடைக்கு தயாராகி விடும்.**

# வாசகர் உலகம்

எம் நிழல் போன்ற இளைஞனே!
நிலவின் பிறப்பு இரவு
இரவின் பிறப்பு நிலவு
ஒவ்வொரு மாதத்தின் எதிர்பார்ப்பே
இளைஞனின் வரவு!

-மதி சண்முகராஜா, டியூரன்-

இளைனாய் உள்ள கலைஞனே - உன்
கரங்களில் உருவாகும் கவர்ச்சியான வடிவங்களுக்கும்
இதயத்தில் உருவாகும் இனிமையான எண்ணங்களுக்கும்
எம் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

-தீபா, உருத்திரபுரம்-கிளிநொச்சி-

'இளைஞன்' மாத ஜனரஞ்சக சஞ்சிகையாக மலரும், என்றிருந்த எனக்கு ஏமாற்றமே மிச்சம். பத்திரிகை செய்திகளை தர எத்தனையோ செய்திப்பத்திரிகைகள் உள்ளன. ஆகவே ஆசிரியர் அவர்களே, தயவு செய்து இதைக்கவனத்தில் கொண்டு, ஒவ்வொரு மாதமும் 2,3 சிறுகதைகள், 3 தொடர்கதைகள், நல்ல ஆக்கமுள்ள கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-ம. மகேசன், ஹம்பேர்க்-

இதமான இளைஞனே
உதயமாகி மூன்றாண்டு
விதைத்தவர்கட்கு பயன் தராவிடினும் - நாம்
அறுவடை செய்யச் செய்ய - தமிழ் முத்துக்களை அள்ளித் தருகிறாய் - செந்
தமிழமுதும், தேன்துளிகள்
இதழெங்கும் முத்தணிகள்
இல்லமெலாம் தமிழ்ப்பணிகள்
அகண்ட தமிழ்ப்பாலமாய்
அகிலமெங்கும் ஒளிவீச
வாழ்த்துக்கள்!

-வை. யோகேஸ், ஜேர்மனி-

எனது அன்புள்ள இளைஞனே!
உனது முகம் எனக்குப் பழக்கமானது
உனக்கு நான் ஒரு புதுப்பிரியை
உள்ளத்தால் உன்னை உணர்ந்தவள்!

தமிழன் புகழ்சூடி தலைநிமிர்ந்து நிற்கும்
விலை மதிக்க முடியாது உயர்ந்தவன் நீ!
உந்தனை எந்தன் கட்டுக்குள் நிறுத்திட
எக்காலும் முடியவே முடியாதப்பா!
அத்தனை அழகுடன் மலரும் மன்னவா!
அச்சில் உனது அறிவைப் படைத்தவா!
அணு வைத் துழைத்து, ஏழ்கடலில் புரட்ட
திருக்குறலால் மட்டும் முடியாது
தித்திக்கும் என் குரலாலும் முடியுமென்று
தரணிக்கு முரசு கொட்டும் திறமையுடையவனே!
குன்றின் மேல் குடிகொண்ட தமிழ் மகனே
குளிரில் நடுங்கி பனியில் தொடும் கோமானே!

ஆழ்கடல் பல தாண்டிச் சென்றாலும்
ஆழ்மனதில் தமிழ் தாகம் கொண்டவனே
வானத்தில் வலம்வந்து வாழ்த்துகின்றேன்
வாழ்க நின் சேவை வளர்க நின் பணி!

-உதயகுமாரி பரமலிங்கம், வெள்ளவத்தை- கொழும்பு-

இளைஞனைப் பார்த்தேன்.
இளமையாக இருந்தான்.
இத்தனை காலமாகப் பார்க்க முடியவில்லையே என்ற தவிப்பு எழுந்தது உண்மை!
இனிமேல் தொடர்ந்து பார்ப்பதாக எண்ணம்.
இளைஞர், இளைஞி களுக்கான ஆக்கங்களை
அதிகரித்தால் இன்னும் சிறப்பு என்பது தாழ்மையான கருத்து.

-களுவாஞ்சிக்குடி யோகன், சுவிஸ்-

கற்றவர் நெஞ்சங்களில் கருவுற்று
பத்திரிகையாக வெளிவரும்
இளைஞனே!
காலங்களின் செய்திகளை இனிதாக - எமக்கு

தொடர்ச்சி 22 ம் பக்கம்...



# சிறுவர் உலகம்

## பொன்னான பொழுதைக் காட்டும் கடிகாரங்கள்!

* உலகின் மிகத்தொன்மை யான சுவர்க்கடிகாரம் 1386 ம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, தற்போது SALISBURG என் னும் தேவாலயத்தில் உள் ளது.



* பிரான்ஸ் நாட்டிலுள்ள St. Pierre என்று அழைக்கப் படும் தேவாலயத்தில் உள்ள வானசாஸ்த்திரக் கடிகாரம் தான் உலகிலேயே மிகப்பெ ரியது. இக்கடிகாரம் 40 அடி உயரத்தையும் 20 அடி அக லத்தையும், 9 அடி ஆழத் தையும் கொண்டது.

* இன்றுவரை எவருமே ஒரு கடிகாரத்திற்கு கொடுக்காத தொகையை, நியூயோர்க்கில் 1991 ம் ஆண்டு சித்திரை மாதம் 24 ம் திகதி ஒருவர் கொடுத்து வாங்கியிருக்கி றார். இதற்காக இவர் கொடுத்த தொகை 905, 882 பவுன்ஸ் ஆகும்.

* மிகவும் எடை கூடிய கடி காரத்தைப் பற்றி சொல்லும் போது, அப்பெருமை, வைகாசி மாதத்திலிருந்து ஐப்பசி வரை கனடாவில் நடாத்தப்பட்ட "EXPO 86" என்னும் கண்காட்சியில் சுவிஸ் நாட்டினரால் வைக் கப்பட்ட கைக்கடிகாரத் திற்கே செல்கிறது. இதன் எடை 35 தொன்களும், உயரம் 80 அடியும் ஆகும்.

* உலகின் மிகச்சிறிய கைக் கடிகாரம் JAEGER LE COLTRE என்னும் பெயர் கொண்ட சுவிஸ் நாட்டினரால் தயா ரிக்கப்பட்டது. அதன் நீளம் 12 mm, அகலம் 4, 76 Cm ம் ஆகும்.

* 1989 ம் ஆண்டு சித்திரை 9 ம் திகதி சுவிற்சலாந்தி லுள்ள ஜெனீவா நகரத்தில் 4, 950, 000 சுவிஸ் பிராங் கிற்கு (1, 864, 304 பவுண்ஸ்) ஒரு கைக்கடிகாரத்திற்கு கொடுக்கப்பட்ட அதிக தொகையாக கருதப்படுகின் றது.


சிவோமியோ, சுவிஸ்-

---

சிறுவர்களே!
உங்களிடமிருந்து
ஆக்கங்கள்
எதிர்பார்க்கப்
படுகின்றன.

---


சிறுவர்களே!



* தோல்வியில்
பொறுமையை
கடைப்பிடியுங்கள்.
வெற்றியில்
உறுதியை
கடைப்பிடியுங்கள்.
வாழ்க்கையில்
நம்பிக்கையை
கடைப்பிடியுங்கள்.
முன்னேற்றத்தில்
முயற்சியை
கடைப்பிடியுங்கள்.
நேசத்தில்
நேர்மையை
கடைப்பிடியுங்கள்.
உலகத்தில்
மனித நேயத்தைக்
கடைப்பிடியுங்கள்!

## புள்ளிகளில் கைவண்ணம்

இனிய சிறுவர்-சிறுமியரே! படத்தில் இருப்பது என்னவென்று தெரிகிறதா? ஒன்று முதல் 56 வரையுள்ள புள்ளிகளை இணைத்துப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.



## சோகக்கதை

எப்போதாவது நாயோ, பூனையோ கண்ணீர் விட்டு அழுது பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருக்க முடியாது. மனிதர்கள் மட்டும் தான் கண்ணீர் விட்டு அழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவர்கள் என நினைத்திருப்பீர்கள். மனிதர்களைப் போலவே சோகமான நேரங்களில் கண்ணீர் விட்டு அழும் பாலூட்டி இனம் ஒன்று இந்து மகா சமுத்திரத்தில் வசிக்கிறது. இதன் பெயர் டுகோங். மனிதர்களைப் போலவே நுட்பமானவை. இவைகள் அழுவதைப் பார்த்தால் உங்கள் கண்களிலும் கண்ணீர் வந்துவிடும்.



# சிறுகதை..

தமிழில் கூறிவிட்டேன். அது விளங்காது அவர்கள் 'எல்ல எல்ல' என்று மீண்டும் மீண்டும் கூறியது எனக்குச் சிரிப்பை ஊட்டியது.

நான் சிரிக்கவில்லை. எனக்குத் தேவை காசு. பணக்காரனாக இருந்தால் சிரித்திருப்பேன்— கேலி செய்வதாக அவர்கள் எண்ணினாலும் பரவாயில்லையென.

அவர்கள் என் கைகளில் பவுன் நோட்டுகளை திணித்துவிட்டுச் சென்றனர். எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் முதல் சம்பளம் அல்லவா! ஒரு மனிதனுக்கு முதல் சம்பளம் என்ன மனநிலையைக் கொடுக்கும் என்பதை என்னால் உணர முடிந்தது. அந்த உணர்வு பற்றி இப்போதும் படித்துக் கொண்டிருக்கும் உனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

என் வேலை தொடர்ந்தது. நான் மேலும் மேலும் பணம் சேர்த்துக் கொண்டிருந்தேன். என்னுடன் இருந்தவர்கள் என்னைக் கேலி செய்தனர். மானத்துடன் வாழ வேண்டுமென்றனர். மானத்தோடு வாழ நினைப்பவருக்கு அந்நிய நாட்டில் என்ன வேலை?

தமிழ்க்குமரா! நீயே கூறு. மானம் என்பது அந்நிய நாட்டில் அகதியாக வாழ்வது தானா? அப்போது நான் என் மனதிற்குள் கூறிக்கொண்டேன். நான் மானத்தோடு வாழ இங்கு வரவில்லை. காசுக்காக வந்துள்ளேன். ஆண் பிள்ளையென்றால், பணம் காய்க்கும் மரம் என்ற எண்ணத்துடன் வாழும் சமுதாயத்தில்தானே நானும் பிறந்தேன்!

நான் இவர்களை உடன் தங்கி இருப்பவர்களாக மட்டுமே எண்ணுகிறேன். எனக்கும் இவர்களுக்கும் இடையில் உள்ள பந்தம் அவ்வளவுதான். உன்னுடன் பழகுவதுபோல் யாருடனும் பழகுவதில்லை. இவர்கள் முதுகில் குத்த தயாராய் இருப்பவர்கள். நான் முதலில் ஒரே நாட்டவர், அதுவும் தமிழர் என்றுதான் இவர்களுடன் பழகினேன். இவர்கள் அப்படி அல்ல.

நான் செல்லச் செல்ல என் வேலைக்குப் போட்டி அதிகமாகிவிட்டது. மானம், அவமானம் பேசியவர்கள் எல்லாம் கல்லறையைச் சுற்றி வருகிறார்கள். கல்லறைக் கனவுகளைக் காண்கிறார்கள்.

ஆமாம்— அவர்களும் கல்லறையைச் சுத்தம் செய்கிறார்கள். ஆனால், வீட்டுக்குக் கடிதம் எழுதும்போது அலுவலகமொன்றில் எழுத்தராக வேலை செய்வதாகவும், பல்பொருள் அங்காடியில் கணக்கராக வேலை செய்வதாகவும் எழுதுகின்றனர்.

ஒரு நாள் நான் சுத்தம் செய்த கல்லறையைத் தான் சுத்தம் செய்ததாகக் கூறி பணம் பெற்றுவிட்டான், என்னுடன் தங்கியிருக்கும் ஒருவன். அன்று முழுவதும் சண்டைதான். இப்படிப் பட்ட நம்பிக்கைத் துரோகங்களையும் சமாளித்துக் கொண்டு இருக்கிறேன். எனக்குத் தேவை காசு.

நம்பிக்கைத் துரோகம் என்றால், உங்களுக்கு வேறு அர்த்தங்கள் தோன்றும். பழைய தலைமைகள் செய்தவை, இப்போது தன்னலங்களுக்காக ஒரு சிலர் செய்வது. ஆனால், நான் வாழும் சூழ்நிலையில் இதுதான் நம்பிக்கைத் துரோகம். ஏனெனில், நான் படிப்பில் இருந்து நிறுத்தப்பட்டு பணம் சம்பாதிக்க அனுப்பப் பட்டவன்.

எமது முன்னோர் செய்த தவறுகளுக்கான பலாபலன்களை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இப்போதுதான் தாய்மண்ணின் அருமை பெருமைகளை உணர முடிகிறது. தாய்மண்ணின் வாசனை பல கோடி ரூபாய் கொடுத்து வாங்கும் வாசத் திரவியங்களின் வாசனையை விட மேலானது என்பதை உணர முடிகிறது.

எனக்கும் உன்னைப் போல் படிக்க வேண்டும் என்று ஆசை. நான் படித்தது போதுமென்று பெற்றவர்கள் கருதியதற்குக் காரணம், நான் மூன்று பெண்பிள்ளைகளுடன் சேர்ந்து பிறந்த ஒரே ஒரு ஆண்பிள்ளை என்பதுதான்.

நமது சமூதாயத்தில் ஆண்பிள்ளை என்பவன் திருமணச் சந்தையில் சகோதரி என்னும் பண்டத்தை விற்கும்போது கொடுக்கப்படும் சீதனமென்னும் விலைக்காக உழைக்க உண்டாக்கப்பட்ட இயந்திரம் அல்லவா? நான் இதற்கு விதிவிலக்கா? அதுவும் மூன்று பெண்களுக்கு சகோதரன். உங்கள் வீட்டில் நீங்கள் நால்வரும் ஆண் பிள்ளைகள் என்பதால் நீ கொடுத்து வைத்தவன்.

இந்த வேளையில் உனக்கு என் அக்கா பற்றிக் கூற வேண்டும். என் அக்கா மேல் நான் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன்! அம்மாவை விட அக்காவில்தான் அதிகம் அன்பு செலுத்தினேன். அவருக்கு திருமணம் பேசப் பட்டது. அப்போதுவரை என்னில் அன்பு வைத்திருந்த அக்கா நகைகளிலும், வீடு, நிலம், பண்டம், பாத்திரங்களிலும் அன்பு வைக்கத் தொடங்கினார். எனக்குள் ஒரு சந்தேகம். அக்கா திருமணம் செய்துகொள்ளப் போவது மனிதர்களையா? பண்டங்களையா?

கூடப் பிறந்ததற்காக நான் செய்கிறேன். இந்த இளம் வயதிலும் நான் துறவி போல்தான். அளவு சாப்பாடு, நல்ல ஆடைகள் இல்லை— இன்னும் பல. என் மனதை உறுத்தும் ஒரு செய்தி— இப்போது அன்புடன் இருக்கும் தங்கைகள் திருமணம் செய்யும் காலம் வந்தவுடன் அக்கா போல என்னை விட்டுவிட்டு பண்டங்கள் மீது அன்பு செலுத்துவார்களோ!

எங்கள் சமூதாயத்தில் சீதனப் பிரச்சினை பயங்கரமாக உள்ளது. நான் தமிழ் நாட்டைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொண்டேன். அங்கிருப்பதைவிட நமது நாட்டில் நிலைமை வித்தியாசம். தமிழ் நாட்டில் மாமியார்தான் சீதனப் பட்டியலைத் தயாரிப்பது. நமது நாட்டில் மணப் பெண்களே அதைச் செய்கிறார்கள்.

மாப்பிள்ளை வீட்டிற்குப் பெண் செல்லும் வழக்கம், தமிழ்நாட்டில். ஆனால், மாப்பிள்ளை பெண் வீட்டில் தங்கும் நிலை, நம் நாட்டில். எமது சமுதாயம் புரட்டப்படவேண்டும். இல்லாவிட்டால், என்னைப் போன்றவர்கள் இந்தப் பெண்களுக்காக உழைத்தே அழிந்துவிடுவோம். முதுகெலும்புள்ள கணவர்களைத் தேடமாட்டார்கள்— தாய் வீட்டைச் சுரண்டியே வாழ்வார்கள்.

எனக்கு இங்கிருக்கக் கொஞ்சமும் விருப்பமில்லை. நமது பண்பாட்டிற்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு? பெண்களைக் காணச் சகிக்கவில்லை. அவர்களின் ஆடைகள்— சே! யாரிடம் போய்ச் சொல்வது?

நமது பெண்களை எண்ணிப் பார்க்கிறேன். இங்கோ இன்று ஒரு ஆணுடன் கைகோர்த்துக் கொண்டு செல்வாள். நாளை இன்னொருவனைத் திருமணம் செய்வாள். கண்டவர்களுடன் கூட ஆடுவார்கள். மது அருந்துவார்கள். திருமணத்திற்கு முன்பே உடலுறவு சாதாரணம். ஆனால், கள்ளம் கபடமில்லாமல் பழகுவார்கள்.

குமரா! எனக்கு நேரம் வந்துவிட்டது. அடுத்த கடிதத்தில் இன்னும் விபரமாக எழுதுகிறேன். இப்போது கல்லறையைச் சுற்றச் செல்ல வேண்டும். அடுத்தவர்கள் தயாராகி விட்டனர். இங்கு அதிக நேரமிருந்தால் எனக்குப் பணம் கிடைக்காது. இப்போதே ஓடவேண்டும் கல்லறைக்கு. கல்லறையில் தான் என் எதிர்காலமே இருக்கிறது. பணக்காரனாக வேண்டுமென்ற என் கனவை கல்லறை நிச்சயம் நனவாக்கும்."

நான் கடிதத்தினை மடித்து வைத்தேன்.

அது பழைய கடிதம். இப்போது அவன் அக்காவிற்கு திருமணமாகிவிட்டது. குறிஞ்சிக்குமரன் கூறியது போல், பண்டம் பாத்திரங்களுடன் இல்லை. பல இலட்சங்கள் கொடுத்து ஒரு பொறியருடன். கல்லறையைச் சுத்தமாக்கிய பணத்தால் ஒரு என்ஜினியரை விலை பேசி வாங்க முடிந்தது!

(நன்றி - "ராணி")

# கிளிநொச்...

நொச்சி மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டு உள்ளது. கோவில் பள்ளிக்கூடம் ஆகியவற்றில் திரண்டு இருக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

முல்லைத்தீவு ராணுவ மகாம் மீது தாக்குதல் நடத்தியதற்கு பழிக்குப்பழி வாங்கும்வகையில் கிளிநொச்சி நகர் மீது ராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்துகிறது. இதில் அப்பாவி தமிழர்கள் பலர் கொல்லப்பட்டு உள்ளனர் என்று லண்டன் அலுவலகத்திலிருந்து விடுதலைப்புலிகள் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**வாசகர்கள் கவனத்திற்கு...**

தவிர்க்க முடியாத காரணத்தால், இந்த இதழில் செ. பரராசசேகரம் அவர்களின் "ஈழப் பூர்வீக வரலாறு" தொடர் இடம்பெறவில்லை.

# கவிதைகள் உலகம்

## வேண்டுதல்

இன்பத்தமிழ் இலக்கணத்தில்
இரண்டறக் கலந் தொன்றாய்
இருப்பவனே முருகையா - நீ
இருக்கையிலே ஈழத்தமிழர்க்கு
ஏனிந்த துன்ப நிலை சொல்லையா
நாடியுனை வந்து தொழும்
நல்ல தமிழ்ப் பக்தரெல்லாம்
வீடிழந்து வீதியிலே - அவர்
நாற்று வைத்த பயிரெல்லாம்
வாடுதடா பாதியிலே - நீ
தேருந்து வரும் தெரு வீதியிலே
தென்னிலங்கை ராணுவவோ
காருந்து சொல்லுதடா
மாமரமொளிந்த சூரனையும்
வேலெறிந்து வென்றவனே வேலைய்யா -எம்
வேதனையைத் தீர்த்தருள மாட்டாயா?
பாழடைந்த யாழ் நகரைப் பாராயோ?
பைந்தமிழ் வடிவே முருகையா
ஊரெழுந்து பரதேசம் - பலர்
உயிரிழந்து பரலோகம் -இனும்
நீயெழுந்தருள மாட்டாயா
நீல மயில் வாகனனே முருகையா

-ப. இராஜகாந்தன், பிரான்ஸ்-

## ஓ... இளைஞனே...!

இளைஞா!
படித்து முடித்தவுடன்
பவனி வர
பல்லக்கு தேடாதே!
மேடு பள்ளமான
சமுதாயத்தை
சமன்படுத்தும்
மண்வெட்டி தேடு!

## அடையத்துடிக்கும் அன்பு.

கீழ்வானிற் கதிரவன் செங்கோளப் பிளம்பாக
மேகத்தை உரசிக்கொண்டு
கடல்க் காதலியை காணும் ஆவலில்
அமைதியாய் வானில் வெளிவருகின்றான்.
காதலனைக் கண்ட களிப்பில்
கடலவள் சிலிர்க்கின்றாள்.
தன் அலைக் கரங்களால் காதலனை
அள்ளி அணைத்திடத் துடிக்கின்றாள்.
தன் முயற்சி பலிக்காத அவள்
மீண்டும், மீண்டும் முயல்கிறாள்.
இவள்தான் அவன் தானத்தை அடைய முடியுமா?
அல்லது, அவன்தான் இவளுக்காக கீழிறங்கி வருவானா?

-ஏகாந்தப்பிரியா, புங்குடுதீவு-வவுனியா-

## உயிர்ப்பூட்டும் கவிதை

ஊர்விட்டு ஊர்வந்து
உண்ண உணவு எதுவுமின்றி
எதிலிகளாய் நாம் இன்று
ஏக்கத்துடன் இருந்தாலும்
எம் தலைவன்
மண்ணிலன்றி நாம் - யாரையும்
மண்டியிட்டது கிடையாது

பிடித்துவிட்ட பெருமையிலே
பித்துப்பிடித்தவர்கள் கூத்தாடி
கழியும் ஓர் சாமம்
கரிய விழி பிதுங்கி
இருட்டை இலக்கு வைத்து
இயந்திரத் துப்பாக்கி இயங்கும்
முற்றத்து பூமரமும்
முன்னின்று வெடிக்கும்
மாமரத்தில் தொங்கும்
மாங்காய்களும் வெடிக்கும்
எதிரியவன் கால்வைக்கும் இடமெல்லாம்
எமலோகம் அவனை அழைக்கும்
எம்பூமி இடிதாங்கிய தாய்ப்பூமி
எம்மைத் தவிர எந்த அந்நியனும்
நிம்மதியோடிருத்தல் முடியாது

கவிதை எனில் கற்பனைதான்
ஆனால் இங்கு
கற்பனைகள் இல்லாது
பிறக்கின்ற கவிதைகளை
சொற்களால் சுவரிடுதல் முடியாதே
உள்ளதை உள்ளபடி
எடுத்து இயம்பியதால்
கவிதை இதுவல்ல இது
உயிர்ப்பூட்டும் கவிதையே.

-மதிஉதயகுமார், வவுனியா-

## யார் அந்த நிலவு?



கட்டழகி - உன்
கண்ணழகால்
காளையிவன்
கல் நெஞ்சிலிருந்து
கசிந்தது
கண்ணீரல்ல,
கந்தளாச் சாறு

கண்ணே!
உனது
கண்கள் மட்டும்
கம்பனிடம்
கிடைத்திருந்தால்
கரும்புச் சாறாய்
கவிதைகளையல்லவா
கறந்திருப்பான்.

கண்ணே!
உனது ரம்மியத்தை
ரவிவர்மன்
ரசித்திருந்தால்
ரதியை மிஞ்சிய
ரதமாய்
ரசிகர்களுக்கு
ரஞ்சிதம் செய்திருப்பான்

சீதையைக் காணமுன்
ராமர் - உன்
சித்திரவிடையை
கண்டிருந்தால்
நிச்சயமாய்
நீதான்
ராமாயணத்தின் நாயகி.

ரம்பையின்
ரட்சிப்பாய்
பூலோகம்
படம் போட்டெடுத்த
புதுமைப் பொக்கிஷம் - நீ

கின்னஸ்சில்
உன் - பெயர்
கிடைக்காமல் போகலாம்.
ஆனால்,
என்னுள்ளம்
ஏற்றுக்கொண்ட
விருது பெறா
விசித்திரம் - நீ

கண்ணே!
நீ
இன்னொரு
தாஜ்மகாலையல்லவா
என்னுள்ளத்தில்
செதுக்கிவிட்டு
சென்று விட்டாய்!

-ரமேஷ் வவுனியன்-

# தேன்கூடு..

ண்டு, குவாட்டேர்ஸில் தங்கிவிடுவாள். அகால நேரங்களில் அம்புலன்சுக்கு போன்செய்து வரவழைத்து, அதில் ஏறி வீடு வரை போவதும் உண்டு. எந்த மாதமுமே சம்பளம் என்று ஒன்றைப்பெறாத இவளை யாருமே சந்தேகக்கண் கொண்டு பார்க்கவில்லை. ஒரு சிலருக்கு இவள் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்தாலும், ஒருவேளை சி.-ஐ.டி அதிகாரியோ என்று மௌனம் சாதித்திருக்கிறார்கள்.

3 மாதங்கள் இந்த நாடகம் அரங்கேறியபடிதான் இருந்தது. ரோயோட்டா சாவிக்காரி தன் பாத்திரத்தை சிறப்பாகவே நடித்துக்கொண்டிருந்தாள்.

பலநாள் கள்வன் ஒருநாள் அகப்படுவதுதான வழமையாயிற்றே!

திடீரென ஒருநாள் இவள் கைது செய்யப்பட்டிருக்கிறாள். களவாக பல நற்சாட்சிப்பத்திரங்கள் (டாக்டருக்கு உரிய அனைத்தும்) ஒருவனால் கொடுக்கப்பட்டது தெரியவந்தது. அவனும் சி.ஐ.டி போலீஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கிறான். கைது செய்யப்பட்ட நிலுக்கா, பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறாள்.

ஒரு டாக்டராக வேண்டும் என்ற வெறியில் நோயாளிகளையும் ஏமாற்றி, பல டாக்டர்களையும் ஏமாற்றி, எப்படி இவளால் வலம் வர முடிந்தது என்று இன்னும் எல்லோரும் மலைத்துப்போய் நிற்கிறார்கள். அதே சமயம் டாக்டராக வேண்டும் என்ற வெறி, ஒரு சிறுமியை எப்படியெல்லாம் நடக்க வைத்திருக்கிறது என்பதை நினைத்துப்பார்க்கும் போது நமது உடம்பே சிலிர்க்கின்றது.

ஆசைகளின் வேகந்தானே சாதனைகளின் ஆணிவேர்?

# வாசகர்...

சேகரித்து சுமந்து வருகின்றவனே!
இறும்பூது போல் எண்ணிக்கையில்லா - தமிழர்
இதயங்களை கவர்ந்திழுப்பவனே!
இன்றைய இளைஞனை வாசித்தறிந்ததும் - அடுத்த
இளைஞனை தேட வைப்பவனே!
உள்ளத்தில் ஊறிய உன் - செய்திகளை
மற்றவர்களுக்கு செலுத்த வைப்பவனே!
இளைஞனே என்றும் நீ இடம் பிடித்தவனாய் - உன்
வாசகர்கள் நிதமும் மகிழ்வதாய்!
கடல்போல் பரந்து - எல்லோர்
கைகளிலும் தவழ்ந்து
உன்னதமான உண்மையின்
பத்திரிகையாக -இருக்க
நான் இதயத்தால் வாழ்த்துகின்றேன்!

-ஆர். ஜெ. றூபன், ஜெர்மனி-

# மீண்டும்...

சாருக்கு தகவல் தருகையில் சம்பவதினம் இரவு நேரம் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டதாகவும், பின்னர் அவ்விடத்திலிருந்து பஜிரோ வாகனம் ஒன்று அநுராதபுரம் நோக்கிச் சென்றதை தான் கண்டதாகவும், இரவு நேரம் ஆதலால் ஆட்களையோ வாகனத்தின் நிறத்தையோ இனம் காணமுடியவில்லை என்று கூறியிருந்தார்.

இவ்விரு சடலங்களினதும் கால்ப்பகுதியைத்தவிர ஏனைய பகுதிகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. சடலங்களின் மேல் ரயரின் உள் வைக்கப்படும் கம்பிகள் மட்டும் காணப்பட்டன. சடலத்தின் நெஞ்சுப் பகுதியில் சிறிய கைப்பெட்டி ஒன்று எரிந்த நிலையில் காணப்பட்டது.

# நம்பினால் நம்புங்கள்

'நம்பினால் நம்புங்கள்' பகுதியில் வரும் 'மிஸ்டர் அவதானி'யின் அவதானிப்புகள் யாருடைய மென்மனதும் புண்படுவதற்காக எழுதப்படுபவை அல்ல.
எம்மை நாமே மாற்றிக்கொள்ளவும், கொஞ்சம் சிந்திக்கச் செய்வதுமே அவதானியின் ஆணித்தரமான நோக்கமாகும். -ஆ-ர்-

ஈழத்தமிழ்க் குடும்பம் ஒன்று 12 வருடமாக ஜேர்மனியில் வாழ்ந்துவிட்டு, கனடாவிற்கு புறப்பட்டார்கள். முதலில் மனைவியும் இரண்டு பிள்ளைகளையும் கனடாவில் கொண்டுபோய் விட்டுவிட்டு, அங்கே அவர்களுக்கு விசா, வீடு, சோசல் காசு போன்ற வசதிகள் கிடைத்த பின்பு கணவன் செல்வதாக முடிவு செய்து மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் கொண்டுபோய் கனடாவில் விட்டுவிட்டு கணவன் மீண்டும் ஜேர்மனிக்கு வந்து வேலை செய்து வரலானார். அதோட மனைவியின் கையால் சமைத்து வாங்கிச் சாப்பிட்டு வந்தவர், தனிமையில் சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டப்படலானார்.

மனைவியிடம் "12 வருடமாக ஜேர்மனியில் வாழ்ந்துவிட்டு இப்படி திடீரென கனடாவிற்குச் சென்ற தன் காரணம் என்ன?" என்று கேட்டபோது, "பிள்ளைகளை ஆங்கிலத்தில் படிப்பிக்கவும், அவர்களின் எதிர்கால நலன் கருதியுமே கனடாவிற்குச் செல்கிறோம்" என்றார். மூன்று மாதங்கள் சென்று, மனைவியும் இரு பிள்ளைகளும் ஜேர்மனிக்கே திரும்பி வந்துவிட்டனர்.

என்ன இப்படி திடீரென திரும்பி வந்துவிட்டீர்கள்? என்ன கனடா பிடிக்கவில்லையே, என்று கேட்ட போது:

"இங்க 2500, 3000 DM என்று சம்பளம் எடுத்துவிட்டு அங்க 500 டொலர் சோசல் காசில வாழவேண்டிக்கிடக்குது, அதோட அங்க வேலை கிடையாது, அப்படிக் கிடைத்தாலும் சம்பளம் மிகமிகக் குறைவு" என்றார்.

"அப்ப நீங்க பிள்ளைகளை ஆங்கிலத்தில படிப்பிக்க கனடாவிற்கு போகவில்லை யா?" என்றேன்.

அவர் முகம் வெட்கத்தால் சிவக்க நான் மெல்ல நழுவலானேன்.

-மிஸ்டர். அவதானி-

# உட்கருத்து...

தருகிறது.
பேனா எடுத்தவர்களெல்லாம் எழுதிவிடவும் முடியாது. எழுதுபவர்கள் எல்லாம் எழுத்தாளர்கள் ஆகிவிடவும் முடியாது. மோகனராஜா எழுதுகிறவர் என்றே எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் ஏதோ எழுதவேண்டும் என்றே கடந்தமாத இளைஞனில் அர்த்தமற்ற இந்துமதத்தை விமர்சித்த இரு விமர்சகர்களுக்கு விடை எழுதியிருந்தார்.
சகோதரா மோகனராஜா!
நீங்கள் 'பாடு நிலாவே' சினிமாக் கதையா எழுதுகிறீர்கள்....? சில விடையங்களுக்கு நாம் தலைப்பிடுவது, தலைப்பு ஒன்று வேண்டும் என்பதற்கே. சில விடையங்களுக்கு நாம் தலைப்பிடுவது தலைப்பைத் தகுதிப்படுத்தவே.
அப்போ நீங்கள் தலைப்பு ஒன்று வேண்டும் என்றா தலைப்பிட்டிருக்கிறீர்கள்? ஏனெனில் தலைப்பைவிட்டுவிட்டு நிங்கள் கேட்டிருக்கும் நியாங்களுக்குத்தானே பதில் கேட்டிருக்கிறீர்கள். எனவே உங்கள் நியாயங்களை யாவது நியாயங்களாகக் கேளுங்கள். நாம் (விமர்சகர்கள்) பதில் தருகிறோம்.
கல்லை எறிந்துவிட்டு, நாய் கலைக்கிறது என்று நாயையும் கல்லையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்திவிட்டு கல்லெறிந்த கையை நிரபராதி என்பது நியாயமா...?
மழைவர வேண்டும் என்று பிரார்த்திக்கப் போனால், கையில்க்குடையோடு போவது தான் உண்மையான நம்பிக்கை என்ற மோகனராஜா, முரதூர். பழ. தியானுக்கு அழித்த பதில் அசாத்தியமான ஆசைகளைக் எண்ணிக்கொண்டு நம்பிக்கையின் மீது பழி சுமத்தலாமா? என்றவர், 'இறைவன் என்னை இறக்கவிட மாட்டான் என்ற நம்பிக்கையில் மலையில் இருந்து மண்ணை நோக்கி ஒருவன் குதிப்பானேயானால், அவன்தான் உண்மையான, தூய்மையான நம்பிக்கையாளன். அவனே முற்றுமுழுதாய்க் கடவுளை நம்புகின்றான்' என்றார். அப்போ இது சாத்தியமான ஆசையா...?
ஆனிமாத இளைஞனில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது பற்றியும், வான்மீகியின் கற்பனையில் தோன்றியது இராமாயணம் என்றும், பாபர் மசூதியை இடித்த அத்தனை கைகளையும் வெட்டியெறியாமல் விட்டது அரசாங்கம் செய்த மிகப்பெரும் தவறு. பாபர் மசூதி கட்டப்பட்டிருந்த இடத்தில் தான் இராமர் பிறந்தார். அது இராமர் பிறந்த புண்ணிய பூமியென்று இந்தியப்பிற்போக்கு இந்துக்கள் பிதற்றுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.
அப்படியாயின் தீலிபன் நகர் நல்லூர் முருகன் கோவில் இப்போ இருக்கும் நிலம் முன்னர் முஸ்லீம்களுக்குச் சொந்தமானதாம். காயல்ப்பட்டணத்தில் இரந்து வந்து குடியேறிய முஸ்லீம்கள் சாவகச்சேரியில் இருந்து பின்னர் நல்லூரில் குடியேறினார்களாம். அவர்கள் இருப்பதால் தங்களுக்கு கோவில் கட்டத்தடையாக இருக்கும் என அந்நிலத்தை தமக்கு விற்கும்படி கேட்க முஸ்லீம்கள் மறுத்ததால் அவர்களது கிணற்றில் பன்றியிறைச்சியைப் போட்டு விரட்டினார்களாம். பின் முஸ்லீம்கள் அன்றைய ஆட்சியில் இருந்த மன்னனிடம் முறையிட்டுப் பின் நாவந்துறைப்பக்கம் குடியேறியதாக யாழ்ப்பாண வைபவமாலை சுறுகிறது. இதனால்த்தானாம் நல்லூர் திருவிழாவில் கற்பூரம் விற்கும் உரிமையை முஸ்லீம்களுக்கு எழுதிக்கொடுத்ததாகவும் இன்று வரை (தற்போதல்ல) பரம்பரை பரம்பரையாக முஸ்லீம்களே கற்பூரம் நல்லூர்த்திருவிழாவில் விற்பதாகச் சொல்லப்படுகிறது.

'அந்த முஸ்லீம்களின் பரம்பரைகளையேயே தமிழ்ப்பிரதேசங்களில் இருந்தே வெளியேற்றக் காரணமாமிருந்தவர்களை என்ன புதை குழியிலா இடவேண்டும்' மோகனராஜா!

-திருமதி. சாந்தினி ரமேஷ்-

## தேடப்படுகிறார்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தெய்வேந்திரம் சந்திரதாஸ் என்பவரை அவரது நண்பன் இ. மோகனராஜா தேடுகிறார்.

தோடர்புகளுக்கு:
Tel: 069/ 95 40 92 87
(ஜெர்மனி)

# கொட்டும்...

இராணி!

சரி... இராணியைப்பற்றி சில 'சில்லறை விடயங்க'ளை நீங்கள் அறிய வேண்டாமா? இராணிக்கு ஏகப்பட்ட சொத்துக்கள் இருக்கின்றன அல்லவா? முடிக்குரிய பெருமளவிலான காணி, பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள், மதுபான விடுதிகள் -இப்படி இவரது சொத்துக்களின் பட்டியல் நீட்டுகொண்டே போகும். முதற்தடவையாக சென்ற ஆண்டு இச்சொத்துக்கள் 96 மில்லியன் ஸ்டேலிங் பவுண்ட்ஸ் இலாபம் ஈட்டி சரித்திரம் படைத்திருக்கின்றன. இவ்வளவு இலாபம் கிடைத்தாலும், முழு இலாபமுமே அரசின் கஜானாவிற்குப் போய்ச் சேர்ந்திருப்பது தான் வேடிக்கை. வருட அலவன்ஸ் தொகையாக இத்தொகையின் பன்னிரண்டில் ஒரு பகுதிதான் இராணிக்கு வழங்கப்பட்டு வருகிறதாம். உல்லாசப்படகுகள், ரயில், விமானம் போன்றவற்றை அரச குடும்பத்தினர் உபயோகிப்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும், அரசு கொடுக்கும் தொகையினை விட இரட்டிப்பான தொகை இலாபமாக அரசிற்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றதாம்.

இல்லாதவரிடத்தில் மேலும் இல்லாமல் போவதும், உள்ளவரிடம் மேலும் போய்ச் சேர்வதும் இதனால் தானோ?

# டெஸ்ட்...

மேலே போய், கொரில்லாக்களின் 'அடிமடி'யிலும் கை வைத்திருக்கின்றது.

உலகில் முதற்தடவையாக டெஸ்ட் ரியூப் கொரில்லாக் குட்டியைப்பிறக்க வைத்து சாதனை படைத்திருக்கிறார்கள் அமெரிக்கர்கள்!

இரண்டு மாவட்டங்களில் இருந்து தபாலில் வந்து சேர்ந்த உயிரணுக்கள், புது உயிருக்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கின்றன.

பெண்ணுக்கு பெயர் றோஸி! ஆணுக்கு பெயர் மொஸிபா! றோஸியின் கருவறையில் ஒரு குட்டி வளர்ந்தது.

சட்டரீதியாக காடுகளில் இருந்து கொரில்லாக்களை இறக்குமதி செய்ய முடியாத காரணத்தால் மிருகக்காட்சி சாலை அதிகாரிகள் இப்படியான வழியில் இறங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இன்று அமெரிக்காவில் 335 கொரில்லாக்கள் மாத்திரமே காணப்படுகின்றனவாம்!

பணம் பத்தும் செய்யும் (பழமொழி) டெஸ்ட் ரியூப் கொரில்லாக்களைப் பிரசவிக்கவும் செய்யும் (புதுமொழி) -ஏ. ஜே. ஜி-

# தடுமாறும்...

முர்த்தி' படையினர் நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்பதை எவருமே நம்பமாட்டார்கள் என்பதையும் அரசு கவனத்தில் எடுத்திருக்க வேண்டும்.

# இராணுவத் தீர்வு?

இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக்குறை உப்பட பல்வேறு காரணங்களால் அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு முனைப்பு இப்போது ஆட்டம் காணத்தொடங்கியுள்ளது. "விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டிவிட்டே அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவோம்' என இரண்டு மாதங்களின் முன்னர் முழங்கிய ஜெனரல் ரத்வத்தையின் தொனி இப்போது தணிந்துள்ளது. 'புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு கொண்டுவரவே இராணுவ நடவடிக்கை' என இப்போது அவர் கூறத்தொடங்கிவிட்டார்.

அரசின் இராணுவத்தீர்வு முனைப்பில் விழுந்துள்ள விளைவுதான் இது!

யாழ்ப்பாணத்தில் புலிகள் தம்முடைய தாக்குதல்களை இப்போது தீவிரப்படுத்தியுள்ள நிலையில் அரசின் இந்த நிலைப்பாடு மேலும் பலவினமடைந்திருக்கின்றது.

முக்கியமாக அதிகரித்த இராணுவச் செலவினம் அரசின் பொருளாதாரத்தை முற்றாகவே முடக்கிவிட்டது. முன்னர் எப்போதையும்விட அதிகமான தொகையாக 3,800 கோடி ரூபா இவ்வருட பாதுகாப்புச்செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் மேற்கொண்ட தாக்குதலுக்கு பெருந்தொகையான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதால், இத்தொகை 4,800 கோடியைத்தாண்டி விட்டது.

இவ்வருட இறுதிக்குள இத தொகை மேலும் அதிகரிக்கும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் ஏற்படக்கூடிய பாரிய செலவினத்தை எவ்வாறு சமாளிப்பது என்பதுதான் நிதி பிரதி அமைச்சர் ஜி. எல். பிரிஸின் தலையைக் குடையும் விடயமாகியுள்ளது.

இராணுவ அமைச்சர் தன்னுடைய பாட்டுக்கு இராணுவத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைக்கு நிதியைக்கொட்டிக்கொண்டிருக்கிறார். இதற்கான நிதியை எவ்வாறு பெறுவதென்பதில் நிதி அமைச்சர் குழம்பிக்கொண்டிருக்கிறார்.

இராணுவத் தீர்வு முயற்சியில் அரசாங்கம் தொடர்ந்தும் இறங்கினால், பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடி ஒன்றை அரசு எதிர்கொள்வது தவிர்க்க முடியாது என நிபுணர்கள் பலரும் எச்சரித்துள்ளார்கள். அரசுக்கும் இந்த நிலை நன்றாகவே தெரிகின்றது. ஆனால், அரசியல் தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்தும் துணிவு சிங்களத்தலைமைக்கு இல்லாதவரையில் நாடு அழிவை நோக்கிச் செல்வதைத் தடுக்க முடியாது!

---

உலகத் தமிழர் கல்வி ஒன்றியத்தின்
3வது ஆண்டு நிறைவு விழாவிற்கான

## தமிழ் அறிவுப்போட்டி

இடம் - SØNDERAGERSKOLEN. TJAIKOFSKISVEJ 1. 7400 HERNING
காலம் - 07.09.1996
நேரம் - காலை 9.00 மணி

போட்டியில் இடம்பெறும் கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் சகல விடயமும் தமிழீழத்தின் நிகழ்வுகளைப் பிரதிபலிப்பனவாக இருக்கும்.

போட்டியின் ஒவ்வொரு பிரிவிலும்
முதலாவது இடத்தைப்பெறும் மாணவருக்கு தங்கப்பதக்கமும்
இரண்டாவது இடத்தைப்பெறும் மாணவருக்கு வெள்ளிப் பதக்கமும்
மூன்றாவது இடத்தைப்பெறும் மாணவருக்கு வெற்றிக்கிண்ணமும்
வழங்கப்படும்.

போட்டி பற்றிய விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் பெறவிரும்புவோர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

S.T. ARUL,
WORLD TAMILS' EDUCATIONAL CONSORTIUM
FREDHØJALLE 7 II.TV
7400 HERNING
DENMARK

தொலைபேசி : + 45 97 21 54 34
விண்ணப்ப முடிவுத் திகதி - 17. 08. 1996

மாணவர்களே! உங்கள் நகரங்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டும் நீங்கள் தமிழ் அறிவுப்-போட்டி பற்றிய விபரங்களை அறியலாம்.

GERMANY
சேகர் ஆட்ஸ்
SEGAR ARTS
(Commercial Artist)

திருமண வாழ்த்து மடல்கள், விளம்பர அறிவிப்புப் பலகைகள், கோயில் திரைச் சேலைகள், உருவப் படங்கள், மற்றும் சகல விதமான ஓவிய வேலைகளுக்கும், திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள் போன்ற சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்: தொலைபேசி: 069-704439
தொலைநகல்: 069-775669 (சனி ஞாயிறு தவிர்ந்த நாட்களில் மாலை 6 மணிக்குப் பின்னர்)

http ://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொன்னாவரம்பிள்ளைச்சி நகன்



Largest Circulation in Europe
இளைஞன்

ELAIGNAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany
Tel: 069/ 704439, Fax: 069/ 775669

மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்!
லிங்கம் ஏசியன் மாக்கற்
ஜவுளி அகம் / மளிகைப் பொருட்கள்
தங்க மாளிகை / வீடியோ விஷன்
PIZZERIA MARE Bruck str 37, 44135 Dortmund Tel: 0231/ 55 16 84
LINGAM ASIAN MARKET Adler str 5, 44137 Dortmund Tel & Fax: 0231/ 14 38 11
PIZZERIA ISOLABELLA Olpe 14, 44135 Dortmund Tel & Fax: 0231/ 57 29 02

# மீண்டும் ஒரு பிரேமதாஸ யுகம்!



ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில் மனிதப்படுகொலைகளும், ரயர் எரிப்புகளும், மனிதக் குழிகளும் மக்களுக்கு சாதாரணமானவையாக தோன்றுமளவிற்கு மிக மலிந்து போயிருந்தன.

மக்கள் பீதியில்லாமல், பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு உட்படாமல் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வழிவகுப்போம் என்ற பிரச்சார முழக்கத்துடன் பதவிக்கு வந்த பொ. ஜ. மு. அரசாங்கம் சிறிது காலத்திலேயே ஆறுகளில் பல சடலங்களை மிதக்கவிட்டது.

இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட அதிரடிப்படையினர் விசாரணைகள் இன்றியே விடுதலை செய்யப்பட்டனர். இத்தகைய நடவடிக்கைகள் கொலைகளுக்கு காரணமானவர்களை இனம் காட்டுகின்றன.

கடந்த சில தினங்களிற்கு முன்னர் கூட குருநாகல் பகுதியிலுள்ள, கிரிபாவ பொலீஸ் பகுதியிலுள்ள பின்தங்கிய கிராமமான குடதம் மனவா என்னும் இடத்தில் இரு ஆண்களின் சடலங்கள் எரிந்த நிலையில் கிரிபாவ பொலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக கிராமவாசி ஒருவர் பொலீ

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

## கிளிநொச்சியில் ஊரடங்குச் சட்டம்.

இலங்கையில் தமிழர்கள் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படை தாக்குதல் நடத்துகிறது. பீரங்கியால் சுட்ட தரைப்படைக்கு ஆதரவாக போர் விமானங்கள் குண்டு வீசின.

முல்லைத்தீவு ராணுவ முகாமை இழந்த ஆத்திரத்தில் சிங்கள ராணுவம் கிளிநொச்சி மாவட்டத்தில் பயங்கர தாக்குதல் நடத்தியது. முப்படைகளும் போரில் ஈடுபட்டன. விடுதலைப்புலிகள் எதிர்த்து தீரமாக போராடுகிறார்கள்.

இதைத்தொடர்ந்து கிளி

தொடர்ச்சி 20 ம் பக்கம்...


## கொட்டும் பணமழை!



அப்பாடா! ஒரு வழியாக இந்த டயானாவின் விவாகரத்து விவகாரம் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படும் போலிருக்கின்றது! இழுத்தடிக்கப்பட்டு வந்த விவகாரம். இப்பொழுது ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட இளவரசி டயனாவே ஒத்துழைத்திருக்கிறார். விவகாரத்து ஒப்பந்தத்தில் டயனா சீக்கிரமாகக் கையொப்பமிட்டு விடுவார் என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்திருக்கிறார்

இளவரசர் சாள்ஸ், டயானாவைக் 'கை கழுவ' 15 தொடக்கம் 20 மில்லியன் ஸ்டேலிங் பவுண்ட்ஸ் வரை 'தாரை வார்க்க' இருக்கிறாராம். இளவரசர் எட்வோட்டுக்கு (இராணி எலிசபெத்தின் கடைசி மகன்) திருமணம் செய்து வைப்பதில் இராணி மும்முரமா இருப்பதால், தானே பண உதவி செய்து, சீக்கிரமாக இப்பிரச்சனைக்கு 'முழுக்குப்போட' அவசரப்படுகிறாராம்

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

உங்கள் பாதுகாப்பான சொகுசான பயணத்திற்கு...
WORLDLINK REISEN

Mainzer landstr 99, 60329 Frankfurt/M,
Tel: 069/ 23 34 13, Fax: 069/ 23 34 94